
# அமிர்தவசனி

## தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 7<br>இதழ் 7<br>விலை அ. 4 | மன்மத ஸ்ரீ ஐப்பசி மீ<br>அக் - நவம்பர்—1955 | வருட சந்தா<br>ரு. 2-4-0 |

நந்தி வழிவிட சிவலோகரைக் கண்டு
திருக்குளப் பணிசெய்து தில்லையில் கலந்த நந்தனார்.
(பெரிய புராணச் சித்திர விளக்கம் 19. பக்கம் 291)



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. ஓம் கணேசாய நம! | (திருப்புகழ்மணி) | ... 289 |
| 2. திருநாளைப் போவார் | (கி. வா. ஜ.) | ... 291 |
| 3. மங்களா சாஸனம் | (அன்பன்) | ... 300 |
| 4. கந்தர் அநுபூதி | (கி. வா. ஜ.) | ... 305 |
| 5. சங்கர பத்தர் | (ரசபதி) | ... 311 |
| 6. விக்னேஸ்வரம் பிரம்ம ஸ்வரூபம் | (ஆ கி ரங்கராஜன்) | ... 322 |
| 7. உலகம் துன்பமயமா? அல்லது இன்பமயமா? | (எம். பி. தியாகராஜன், B.A.) | ... 325 |
| 8. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் | (சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) | ... 328 |
| 9. மதிப்புரை | | ... 334 |
| 10. *Venkata Subramaniam* | (*Thiruppugal Mani*) | ... 335 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ, மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| | | |
|---|---|---|
| மலர் 7 | மன்மத ஞு ஐப்பசி மீ<br>அக்டோபர்—நவம்பர்-1955 | இதழ் 7 |


## ஓம் கணேசாய நம!

(திருப்புகழ் மணி)

முழுமுதற் கடவுளை ஓம் எனும் அக்ஷரத்தால் 'தெரிந்து கொள்ளும்படி உபநிஷத்துக்கள் உபதேசிக்கின்றன. ப்ரம்மம் என்ற முழுமுதல் கடவுள் உலகெலாம், ஜீவராசிகளி லெல்லாம் ஊடுருவி நிற்கும் தத்துவமாகும். "ஒன்ருகி உயிராகி உடல் தோறும் நீ நிற்க, என்றும் அறியார்கள் ஏழைகள் தாம் பூரணமே" என்று பாடியுள்ளார். விநாயக மூர்த்தியின் தத்துவ ரகசியத்தை ஓமெனும் பொருளின் ஓர் உருவ தரிசனமாகத்தான் கருதவேண்டும். "நித்யானந்தமாகி நிஷ்கள ஸ்வரூபியாகி, சத்தியாய்ச் சிவமுமாகித் தாணுவாய் உலகுக் கெல்லாம், சித்தியாய் முத்தியாகித் திகழ்பர மார்த்தமாகி, அத்தியின் உருவமான அண்ணலை வணங்கு வோமே."

ப்ரம்மம் ஆனந்த ஸ்வரூபம். எங்கும் நிறைந்த பண்பு உடையது. உலகுக்கு ஆதாரமாகவும் சக்தியாகவும் முத்தியாகவும் தாய் தந்தை யாகவும்

---

இன்பமுடன் உபதேசம் செய்வாய் ஸ்வாமி
ஈனன் இவன் என்றென்னை இகழ்ந்தி டாதே

நிற்கின்றது. இத்தனை லக்ஷணங்களையும் விநாயகரிடம் பார்க்கலாம்.

விநாயக மூர்த்தியின் அவதாரமே, தெய்வம், விலங்குமுதல் தேவர்கள்வரை எல்லாம் தானுய் இருக்கும் தன்மையை உணர்த்துகின்றது. விலங்குகளில் பலத்திற்கும் கூர்மையான புத்திக்கும் முதன்மையாயது என நின்று விளங்குவது யானைதான். சுத்தமான சைவ உணவுதான். நீராடுவதில் மிகவும் மோகம் கொண்டது.

மானிடனுக்கும், மற்றைய ஜீவர்களுக்கும் உபகாரமாக இருக்கக் கூடியது. மிகவும் அன்பும் நன்றியும் உடைய ஜீவன். இந்த சிறந்த மிருக உருவுடன் மானிட உருவும் சேர்ந்து, தெய்வீகப் பண்பும் ஸ்ரீசிவராஜன் குறிப்புகளையும் தன் அடையாளமாய்க் கொண்ட கணபதியைப் பார்த்தாலே சந்தோஷம்தானே. இந்த கஜமுக அவதாரம்போல் மற்ற அவதாரங்களும்.

நரஸிம்மாவதாரம், வராக அவதாரம், மச்சாவதாரம், கூர்மாவதாரம் இவைகளையெல்லாம் ஆராய்ந்து நோக்குங்கால், எல்லா ஜீவராசிகளிடமும் கடவுளின் நோக்கம் ஒன்றே என்றும், அவைகளில் தாழ்மை மேன்மையின்றி அவர் வசிக்கிருர் என்றும், வேண்டியவற்கு ஆங்காங்கே கருணையைப் பொழிகின்ருர் என்றும் நன்கு விளங்கும். இவரை வணங்குவார்க்கு துர்க்கை, சரஸ்வதி, லெக்ஷிமி இவர்கள் கடாக்ஷம் ஏற்பட்டு, இகபர செல்வத்தில் நிலைப்பிடம் ஏற்படும் என்று ஔவையும் பாடியுள்ளார்.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு."

ஸ்ரீ கணேசாயநம :

---

உன்பதம் என் சிந்தையினில் ஊன்றிவிட்டால்
உத்தமனே என்னை நான் உணர்வன் இன்றே.

அட்டைப் பட விளக்கம் :

# திருநாளைப் போவார்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் உள்ள பல பிரிவுகளில் மேற்கானாடு என்பது ஒன்று. கொள்ளிடத்தின் கரையில் அந்த நாட்டில் ஆதனூர் என்ற ஊர் நீர் வளமும் நில வளமும் நிரம்பியிருந்தது. அவ்வூரில் உள்ள மக்கள் மிக்க செல்வப் பெருக்கு உடையவர்களாக வாழ்ந்தனர். பல பெருங் குடி மக்கள் நெருங்கி வளர்ந்து வரும் வளப்பம் உடையது அது.

அவ்வூரைச் சார்ந்த புலைப்பாடியில் பஞ்சம குலத்தில் உள்ள மக்கள் உழுதல் முதலிய தம் கடமைகளைச் செவ்விதாகச் செய்து தமக்குரிய உரிமைகளைப் பெற்று மனைவி மக்களோடு இன்புற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் நந்தனார் என்பவர் ஒருவர். அவர் பிறந்து உணர்வு வந்தது முதலே சிவபெருமானிடம் இடையீடு இல்லாத அன்புடையவராக இருந்தார். வேறு நினைவின்றி எப்போதும் இறைவன் திருவருளையே சார்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

தமக்குப் பரம்பரையாக விட்டிருந்த சுதந்தரமாகிய நிலத்தைத் தம்முடைய வாழ்க்கைக்கு உரிய துணையாகக் கொண்டு தாம் செய்ய வேண்டிய தொழில்களைச் செய்து அறம் பிறம்பாத நெறியில் நின்றார் நந்தனார். பறைக்குலத்தினருக்குரிய தொழில்களில் வல்லவராகிய அவர் தம் செயல்களிலும் சிவபெருமான் திருத்தொண்டையே செய்து வந்தார். தோல், நரம்பு முதலியவற்றை மக்களின் உபயோகத்துக்கு மற்றவர்கள் கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைப் பெற்று வாழ்ந்தார்கள். நந்தனாரோ சிவ

---

ஆயிரம் கண்ணன் குறையை அகற்றினேனே
அன்புருவே அடியேனை ஆட்கொள் வாயோ!

பெருமானுடைய கோயில்களில் உள்ள பேரிகை முதலிய தோற் கருவிகளுக்கு வேண்டிய தோலைக் கொடுத்தார். கோயிலில் இசைத் தொண்டு புரிபவர்களுடைய வீணைக்கும் யாழுக்கும் வேண்டிய நரம்புகளை அளிப்பார். கோயில்களில் ஆராதனைக்குக் கோரோசனையைக் கொடுப்பார்.

இறைவனுடைய அன்பர்கள் உலகத்தில் தொழில் செய்து வாழ்ந்தாலும், அந்தத் தொழிலிலும் இறைவனுடைய திருத்தொண்டு இடம் கொள்ளும். தம்முடைய ஜீவனோபாயமாகக் கொண்ட தொழில் எதுவானாலும், அதிலும் சிவத்தொண்டு செய்வதற்கு வாய்ப்பு உண்டு. இறைவன் திருக்கோயிலுக்குள் சென்று தொண்டு புரியும் நிலையைப் பெறுமல் இருந்தும், நந்தனர் தம் தொழிலுக்கு ஏற்ற வகையில் அக்கோயில்களுக்குப் பயன்பட்டார். மனம் இருந்தால் வழியும் உண்டாகும் அல்லவா ?

ஒவ்வொரு கோயிலிலும் முரசு, பேரிகை முதலிய இசைக் கருவிகள் இருக்கும். அவற்றுக்கு வேண்டிய தோல், வார், நரம்பு ஆகியவற்றைக் கொடுப்பதற்காக நந்தனர் ஒவ்வொரு நாளும் கோயில்களை நோக்கிச் செல்வார். கோயிலில் வாயிலின் புறத்தே நின்று தாம் கொணர்ந்தவற்றைக் கொடுத்து விட்டு, அங்கே நின்றபடியே கோயிலையும் பார்த்துப் பார்த்து இன்புறுவார்; குதிப்பார்; கூத்தாடுவார்; பாடுவார்.

கோயிலையும் கோபுரத்தையும் தரிசிக்கும் இன்பத்தைத் தம்முடைய தொழிலோடு பிணைத்துக் கொண்டார் நந்தனர். மற்றவர்கள் புலைச்சேரி வாழ்க்கையில் அருவருக்கும் வகையில் வாழ்ந்தாலும் நந்தனர் அவ்வாழ்க்கையில் தூய்மையும் தொண்டு நெறியும் உடையவராகி விளங்கினர்.

ஒருமுறை திருப்புன்கூர் போய் வரவேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. அங்கே போய்த் தம்மால்

---

நல்நெறி வேறு ஒன்றும் இல்லை நலமுற் றோங்க
நளினமலர்க் கழல்பத்தி அருள்செய் வாயோ!

இயன்ற பணிகளைச் செய்யவேண்டும் என்பது அவர் எண்ணம். மிக்க ஆவலோடு அத்திருப்பதியை அணைந்து திருக்கோயிலுக்குச் சென்றார். திருவாயிற் புறத்தே நின்று உள்ளே உள்ள சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க ஆவல் கொண்டார். அங்குள்ள பெருமானுடைய திருநாமம் சிவலோக நாதர். அவருடைய விருப்பம் நிறைவேறத் தடையாக இருந்தது சந்நிதியில் இருந்த நந்தி. அதைக் கண்டு வருந்திய நந்தனர், "இறைவனைத் தரிசிக்க இயலவில்லையே!" என்று மனம் வாடித் துயரமடைந்தார். அது கண்ட சிவபெருமான் தம் சந்நிதியில் இருந்த நந்தியை விலகச் செய்து தரிசனம் தந்தருளினன். நந்தனர் வாயிற் புறத்தில் நின்ற படியே சிவபெருமானைத் தரிசித்து ஆனந்தக் கூத்தாடினர். பிறகு அவ்வூரைச் சுற்றி வரும்போது அங்கே ஒரு பள்ளம் இருப்பதைக் கண்டார். திருக்கோயிலுக்குப் போகும் அன்பர்களுக்குப் பயன்படும்படி அங்கே ஒரு குளம் வெட்டலாம் என்ற எண்ணம் அப்போது நந்தனருக்குத் தோன்றிற்று. அப்படியே அவர் முயன்று அங்கே ஒரு குளத்தை வெட்டினர்.

தம்முடைய உடல் வலிமையினலும் தொழிலினலும் சிவத் தொண்டையும் சிவனடியார் தொண்டையும் செய்து வந்த நந்தனருக்கு ஒவ்வொரு நாளும் பெருமானுடைய நினைவாகவே சென்றது. அருகிலும் சேய்மையிலும் உள்ள தலங்களுக்குச் சென்று குளம் வெட்டியும் சுவர் வைத்தும் தோல், வார் அளித்தும் தம்தொண்டு வகைகளைப் பெருக்கிக் கொண்டார். நமக்கு இதனல் பயன் உண்டா, நம்மை யாரேனும் புகழ்ந்து பாராட்டுகிறார்களா என்று பாராமல் தம்மால் இயன்ற தொண்டுகளைச் செய்து வந்தமை நந்தனரின் உண்மையான சிவபக்தியைக் காட்டியது. உயிர்க்குலத்துக்குச் செய்யும் தொண்டுகளையும் இறைவனுடைய திருத்தொண்டாகவே கருதுவது பெரியோர் இயல்பு. "நானும்

---

ஓங்கார மானகுரு பரனேஎம் ஐயா !
உவந்தென்றன் சஞ்சலத்தைத் தீர்த்தாள் வாயே

அவருடைய நிலையில் வசதிகளோடு இருந்தால் எவ்வளவோ செய்வேன்" என்று சொல்கிறவர்கள் உண்டு. தொண்டு புரிவதற்கு இதுதான் உரிய பதவி, இதுதான் உரிய வசதி என்ற வரையறை இல்லை. எல்லோரும் தொண்டு புரியலாம். ஆனால் எல்லோருக்கும் ஒன்று இன்றியமையாதது. தொண்டு புரியவேண்டும் என்ற ஆர்வம் மாத்திரம் இருக்க வேண்டும். அது இருந்துவிட்டால் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் செய்யும் தொண்டுகள் இன்னவையென்று அவர்களுக்கே புலப்படும்.

நந்தனார் அக்கால நிலையில் திருக்கோயிலுக்குள் புக இயலாத நிலையில் இருந்தார். ஊருக்குள்ளும் தம் விருப்பப்படி சென்று பழகும் வாய்ப்பு அவருக்கு இல்லை. ஆனாலும் அவர் சிவபிரான் கோயில்களுக்குச் சென்றார்; பக்தி செய்தார்; பலருக்குப் பயன்படும் தொண்டுகளைச் செய்தார். இறைவன் திருக்கோயிலில் முரசு அறைவது ஒரு தொண்டு; அந்தத் தொண்டை நேர்முகமாக நந்தனார் செய்ய இயலாது ஆயினும் அந்த முரசுக்குத் தோலும் வாரும் கொடுப்பதனால் முரசத்தொண்டு செய்தபயனும் இன்பமும் அவருக்கு உண்டாயின. தம் கையால் முரசு அறைந்து தொண்டு புரியும் பக்தர் முரசை அறையும்போது இன்புறுகிறார். அந்த ஒலியைக் கேட்டு நந்தனாரும் இன்பமடைந்தார். தம் குழந்தைக்கு ஒரு விளையாட்டுப் பொம்மையைத் தந்தை வாங்கித் தருகிறார். அந்தப் பொம்மையை வைத்துக் கொண்டு குழந்தை விளையாடி இன்புறுகிறது. பொம்மையை வாங்கிக்கொடுத்தவர் தாமே அதை வைத்து விளையாடுவதில்லை. ஆனால் குழந்தை விளையாடுவதைக் கண்டு அவரும் மிக்க இன்பத்தை அடைகிறார். இதே மனநிலை நந்தனாருக்கு இருந்தது. அதனால், "நாமே திருக்கோயிலுக்குள் சென்று இந்தத் தொண்டுகளைச் செய்ய இயலவில்லையே!" என்ற எண்ணம் இன்றி, அத்தொண்டுகளைச் செய்பவர்களைப்

---

நானென்ற ஆணவத்தால் என்றன் சிந்தை
நலங்குன்றி மயங்காமல் ஆட்செய் வாயோ

பார்த்து, அவற்றில் தாமும் பங்கு கொண்டதாகவே இன்புற்றார்.

நந்தனார் சிவனடியார்களை நீராட்டவில்லை. இறைவன் திருமஞ்சனத்துக்கு நீர் சுமந்து செல்ல இயலாது. அப்படிச் செய்ய முடியவில்லையே என்று எண்ணி ஏங்கிக் கொண்டு நிற்கவில்லை அவர். குடத்தோடு நீர் அளிப்பதைத்தான் உலகத்தில் சமுதாயச் சட்டம் தடுத்ததே ஒழியக் குளத்தோடு நீர் அளிப்பதைத் தடுக்கவில்லை. அவர் ஒரு குடம் நீர் தரவில்லை; ஆனால் பல குளம் வெட்டிப் பல குளம் நீர் தந்தார். அவற்றில் எத்தனை தொண்டர்கள் நீராடினார்கள்! இறைவனுடைய திருமஞ்சனத்துக்கு எத்தனை குளங்கள் பயன்பட்டன! இந்த உண்மை நினைந்து தொண்டுபுரிந்தார் நந்தனார்.

இவ்வாறு பல தலங்களுக்குச் சென்று தம்முடைய திருத்தொண்டிற் சிறந்து நின்ற நந்தனாருக்கு, எல்லாக் கோயில்களிலும் சிறந்தமையால் கோயில் என்று அடையின்றிச் சொன்னாலே தன்னை நினைக்கும் தலைமையுடன் விளங்கும் சிதம்பரம் செல்லவேண்டும் என்ற ஆசை எழுந்தது. அது வரவரப் பெருகியது. ஒரு நாள் இரவு முழுவதும் தூக்கமே இல்லாமல் தில்லையைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தார். அத்திருத்தலத்துக்குச் சென்றவர்கள் அதன் பெருமையைப் பற்றியும் அதன் அமைப்பைப் பற்றியும் சொல்லக் கேட்ட செய்திகள் யாவும் இப்போது அவர் நினைவுக்கு வந்தன. 'நம்முடைய குலத்தினர்கள் அங்கே சென்று ஒன்றும் செய்ய இயலாதே. பல பிராகாரங்களையுடைய அக்கோயிலுக்குள் புகுவது நடவாத காரியம். புறத்தே இருந்து தரிசிக்க முடியாது; பெரிய திருக்கோயில். இந்த நிலையில் அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்!' என்ற எண்ணம் தோன்றவே சற்றுச் சோர்வு உண்டாயிற்று. ஆனாலும் அவருடைய விருப்பம்

---

தானென்ற தத்துவத்தைத் தேர்ந்தே அன்பு
ததும்பலுறு பணிபுரியத் தந்தி டாயோ

போகவில்லை. தில்லைச் செல்லவேண்டும் என்ற காதல் மேலும் மேலும் பெருகியது. "நாளைப் போவேன்" என்று சொல்லித் துணிந்தார்.

மறுநாள் விடிந்தது. விரிந்த உலகமும் தாம் வாழும் புலைச்சேரியும் அதில் வாழ்வார்களுக்கு அமைந்திருக்கும் கட்டுப்பாடுகளும் மறுபடியும் நினைவுக்கு வந்தன. 'நான் அங்கே போய் எதைப் பார்க்க முடியும்? மூவாயிரம் அந்தணர்கள் இடைவிடாமல் இறைவனுக்குத் தொண்டுபுரியும் திருக்கோயில் அது என்று சொல்கிறார்கள். அவர்கள் வாழும் இடத்தை நான் போய்ப் பார்க்க முடியுமா? கோயிலுக்கு உள்ளே சிறிதேனும் செல்ல முடியுமா?' என்ற எண்ணங்கள் வரவே, அன்று புறப்படவில்லை. மறுபடியும் அவர் உள்ளம் அவரை உந்தியது. 'நாளைக்குப் போகலாம்' என்று ஆறுதல் பெற்றார். இப்படி "நாளைப் போவேன்", "நாளைப் போவேன்" என்று ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டிருந்தது.

"சிதம்பரம் போகப் போகிறீராமே? எப்போது போகிறீர்?" என்று அவரைக் கண்டு நண்பர்கள் கேட்பார்கள். "நாளைக்குப் போகலாம் என்று எண்ணியிருக்கிறேன். இறைவன் திருவருள் புரியவேண்டும்' என்று நந்தனர் விடையிறுப்பார். எப்போதும் "நாளைப் போவேன்" என்று சொல்லிக் கொண்டே இருந்தமையால் அவரை யாவரும், "நாளைப் போவான்" என்று வழங்கத் தலைப்பட்டனர்.

நந்தனருக்குத் தில்லைக்குச் செல்லாவிட்டால் உலகில் வாழ்ந்து பயன் இல்லை என்ற அளவுக்கு ஆர்வம் முதிர்ந்தது. ஒரு நாள் புறப்பட்டு விட்டார். கொள்ளிடத்தைக் கடந்து சென்று திருத்தில்லையின் எல்லையில் வந்து நின்றார். 'நாளைப் போவேன்' என்று சொன்னவர், 'இன்று வந்தேன்' என்ற நிலையில் இருந்தார். ஊருக்குள் வேத மோதும் கிடைகளும் வேள்வி செய்யும் சாலைகளும் பல

---

எத்தனையோ பிழைகள் அறி வீனத் தாலே
எளியேன்செய் தேன்அதனை எண்ணு வாயோ

இருக்கும் என்று முன்பு கேட்டிருந்தனர். வேத ஒலி யால் அங்கே கிடைகள் இருப்பதையும், வேள்விப் புகை யால் அங்கே வேள்விச் சாலைகள் இருப்பதையும் உணர்ந்து கொண்டார். 'நாம் எப்படி உள்ளே செல்வது?' என்று அஞ்சினர்.

ஊரின் திருமதிலை வலம் வந்து வணங்கித் திருமதில் வாயிலில் வந்து நின்றார். இப்படியே இரவும் பகலும் வலம் செய்துகொண்டே வந்து, 'எம்பெருமானைத் தரிசிக் கும் வாய்ப்பு நமக்கு இல்லையே!' என்று உருகி நைந்தார். "இறைவனுடைய ஆனந்த நடனத்தைப் பற்றி எவ் வளவோ கேட்டிருக்கிறேன். இந்த உடம்பை வைத்துக் கொண்டு நான் எப்படித் தில்லை அம்பலவாணனைத் தரி சிக்க முடியும்'?' என்று அரற்றினர். மிகவும் ஏங்கினர். சோர்வு மிகுதியினால் கீழே படுத்துத் துயின்றார்.

அப்போது அவருடைய கனவில் சிவபெருமான் எழுந்தருளி, "இந்த உடம்புடன் எப்படி நான் நடன தரி சனம் செய்வேனென்று வருந்துகிருயே! நீ அஞ்சாதே. நீ தீயிடை மூழ்கி எழுந்து தில்லை வாழ் அந்தணர்களுடன் நம்முடைய சந்நிதிக்கு வருவாயாக" என்று வாய் மலர்ந் தான். அப்படியே தில்லைவாழ் அந்தணர் கனவிலும் தோன்றி, "நம்மைத் தரிசிக்கும் பேரார்வத்துடன் திருக் குலத்தில் தோன்றிய நந்தன் என்னும் அன்பன் திருமதிற் புறத்தே பாடு கிடக்கிறான். அவனை அழைத்து வந்து நெருப்பிற் குளிப்பாட்டி என் சந்நிதிக்கு அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டான்.

நந்தனர் துயிலினின்றும் எழுந்து எம்பெருமானுடைய திருவருளை எண்ணி எண்ணி உருகினர். "நாயேனுடைய ஆசை நிறைவேற இயலாததென்று தானே உலகம் உறுதி கூறும்? அதை நிறைவேற்றத் திருவருளே துணிந்தபோது யார் எதிர்நிற்கமுடியும்? எளியேனிடத்தில் எம்பெருமானுக்

---

சித்துருவே சிவகிரியில் ஓங்குஞ் ஜோதீ !
செய்யதிரு மேனியனே சிறக்க வாவா

குள்ள பெருங் கருணைதான் என்னே" என்று குதித்துக் கூத்தாடினர்.

கனவு கண்ட அந்தணர்கள் எம்பெருமான் இட்ட கட்டளைப் படியே திருமதிற்புறத்தை அணுகி நந்தனரிடம் வந்து, "ஐயரே! எம்பெருமான் இட்ட கட்டளையை நிறைவேற்றத் தங்களிடம் வந்தோம். தீயமைத்துத் தரும்படி பெருமான் பணித்தான்" என்று கூறினர். "நாயேன் உய்ந்தேன்" என்று கூறி அவர்களை வணங்கினர் நந்தனர். அந்தணர்கள் திருமதிலின் தெற்கு வாயிலுக்குப் புறத்தே வேறு அந்தணர்கள் அமைத்திருந்த தீக்குழிக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். அங்கே நந்தனர் இறைவன் திருவடியை உளத்தே கொண்டு அவ்வெரியை வலஞ் செய்து வணங்கி அதன் கண் மூழ்கினர். மூழ்கியவுடன் எழுந்தார். அப்போது தேசு பொலியும் திருவுருவும் நூல் விளங்கும் திருமார்பும் பெற்ற புண்ணியமாமுனிவர் கோலத்தோடு விளங்கினர். அவரைக் கண்டு தில்லை வாழ் அந்தணர்கள் கைதொழுது வணங்கினர்கள். எம்பெருமான் திருவருளையும் நாளைப் போவாருடைய பெருமையையும் எண்ணி எண்ணி அதிசயப்பட்டார்கள்.

மற்றத் தொண்டர்கள் நீராடித் திருக்கோயிலுக்குச் செல்வார்கள். நந்தனரோ நெருப்பில் ஆடித் திருக்கோயிலுக்குள் புகலானர். இறைவன் தீயாடி, அவன் அடியாரும் இப்போது தீயாடியானர். தாம் அவ்வளவு காலம் வளர்த்த வேள்வித் தீயில் புகையையும் புண்ணியத்தையும் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் இப்போது வளர்த்த எரியில் மக்கட் குலத்தின் புண்ணிய பயனைப் போன்ற மறைமுனிவரைக் கண்டார்கள். ரசவாதம் செய்பவர்கள் செம்பை எரியிலிட்டுத் தங்கமாக எடுப்பதுபோல, இறைவனுடைய திருவருளால் எரியில் புகுந்த திருக்குலத் திருமேனி கொண்ட நந்தனர் முனிபுங்கவராக எழுந்த அதி

---

சித்துபல விளையாடும் சித்தர் வாழ்வே
சிவராஜ யோகம்அருள் செய்க கோவே!

சயத்தை அவர்கள் கண்டு மனம் கரைந்தார்கள். அந்தணர்கள் சூழ, வாத்தியங்கள் முழங்க, மறையொலி ஒலிக்கத் திருநாளைப் போவார் தம்மைக் கனவில் வந்து அழைத்த அப்பனைக் காணச் சென்றார்.

திருக்கோபுரத்தைக் கை தொழுது ஏனைய சந்நிதிகளைக் கடந்து வலமாக வந்து இறைவன் உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார். அப்பால் அவரைக் காணாமல் அந்தணர்கள் அதிசயித்தார். தன்பால் வந்தணைந்த திருத் தொண்டரின் பிறவியையும் வினையையும் நீறாக்கி இறைவன் தம் திருவடிக் கண்ணே சேர்த்துக் கொண்டான்.

நந்தனாருக்குப் புறவாழ்வில் இறைவனுடைய திருவருளுக்கு உரியவராவதற்கு இயலாத நிலை இருந்ததாகவே தோற்றியது. அவரைப்போன்ற நிலையில் உள்ளவர்கள் அந்தப் புறத் தடைக்கு அஞ்சி இருந்தார்கள். ஆனால் நந்தனார் அகவாழ்வில் இறைவனுடன் அளவளாவினர். சாதி, குலம் முதலிய தடை ஏதும் அகவாழ்க்கையில் இல்லை. ஆதலின் அவர் தம் அகவாழ்க்கையில் வர வரத் தூய்மைபெற்றுப் புண்ணிய மாமுனிவ ராகிவிட்டார். புறத்திலே முனிவராகவும் அகத்திலே புலையராகவும் இருப்பவர் பலர். அவர்களுக்கு இறைவன் அருள் எளிதில் கிடைப்பதில்லை. அகத்திலே முனிவராகவும் புறத்திலே புலையராகவும் இருந்தார் நந்தனர். போலியாகத் தவ வேடம் தாங்குபவர்கள் தம் வேடத்தைத் தாமே கலைத்துக் கொள்ளலாம். ஆனால் புலையராக இருந்த நந்தனாருடைய புற வேடத்தை இறைவன் கலைக்க முன்வந்தான். அகமும் புறமும் தவத் தூய்மை தாங்கிய அந்தணர்களைக் கொண்டு அந்த மாற்றத்தை அவன் செய்வித்தான். முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ ?

---

மகபதிதன் மகளை குற வள்ளி தன்னை
மகிழ்ந்தணைத்தாய் எனைத்தழுவ வந்தி டாயோ

அக வாழ்க்கையில் முனிவராக உயர்ந்தவருக்குத் தடையாக நின்ற புற வாழ்க்கையை இறைவன் மாற்றி விட்டான். அவரைத் தம் திருவடி மாமலரில் வண்டாக உறையும்படி செய்தருளினன்.

---

திருப்பல்லாண்டு 6.

# மங்களா சாஸனம்

(அன்பன்)

உயர்ந்த நாகலோக மாதரிடம் உணவு. பகலில் பொன்னுலகச் சோலையிற் பொழுதுபோக்கு. இரவில் பிரமலோகத்தில் கொலு. மேரு மலையில் அரியணை. எங்கும் அவனுடைய எடுப்பு.

ஆற்றல் அதிகாரம் உள்ள இடத்தில், இல்லை கட வுளுக்கு இடம். சிவநாமம் விஷ்ணு நாமம் எவரும் சொல்லக் கூடாது. பாலர் முதல் பெரியோர் வரை ஓது வது அவன் புகழ். உச்சரிப்பது அவன் பெயரை.

வேத அத்யயனம் மறைந்தது; எங்கும் இரண்ய நாமமே அத்யயனம். நாடெங்கும் இந்த நடப்பு.

ஆணாலும் பெண்ணாலும் அலியாலும் அழியான். எந்த ஆயுதத்தாலும் இறவான். சாபத்தாலும் சாகான். உயர்வதன்றி, அவன் வலிமை ஒடுங்குவது இல்லை. மண் ணிலும் இல்லை, மரணம் அவனுக்கு விண்ணிலும் இல்லை. இரவிலும் இறவான். பகலிலும் படான்.

இப்படி இருந்தவன் இரணியன். தலைகீழ் நடையே அவன் தருமம். பயங்கர ஆட்சி. பரம நாஸ்திகம்.

---

மகிமையுறும் பழனிமலைச் சிகரத் தோங்கும்
மறைமுதலே என்மதியை மலர்த்தி டாயோ

அளவுக்கு மீறி அநியாயம் செய்வாரை, பொறுக்கும் அளவு பொறுத்த இயற்கை, முடியாத அவர்கள் வாழ்வை அவர்களைக் கொண்டே முடித்துவிடும். இதுதான் என்றும் உள்ள செய்தி.

இங்நிலையில் இரண்யனுக்கு ஒரு மகன். பெயர் பிரகலாதன். வயது ஐந்து. பள்ளியில் சேர்த்தனர். ஆரம்ப நாளில் ஆசிரியர், நான் சொல்கிறபடியே தம்பி! சொல்லுகிறாயா என்று தட்டிக் கொடுத்தார். சொல் பார்ப்போம்: ஓம் இரண்யாய நம:

உடனேபிரகலாதன், ஓம்நாராயணாய நம: என்றான்.

ஐயோ என்று அலறி, கொள்ளித் தேள் போல் துள்ளிக் குதித்தார் குரு.

யாரடா உனக்கு இதைச் சொல்லிக் கொடுத்தவன்? அப்பா அறிந்தால் ஆபத்து. மாபெரும் குற்றம்! இதனை இன்றோடு விட்டுவிடு என்று எவ்வளவோ மன்றாடினார். அவர் சொல்லச் சொல்ல, நாராயண நாராயண நாராயண என்று இடையறாது சொல்கிறான் பிரகலாதன்.

முன் வந்தார். நயம் உரைத்தார்; முறையிட்டார்: தலையில் மோதிக் கொண்டார், எத்தனை சொன்னாலும் மாறவில்லை மைந்தன் மனம்.

வேதனை தாளாமல் ஓடினார். இரண்யனிடம் வந்தார்.

ஆ! ஐயோ என்னவோ சொல்கிறானே பிரகலாதன்! என்றார்.

புன்னகையுடன், என்ன சொன்னான்; தைரியமாகச் சொல்லும்! அஞ்சவேண்டா என்றான் இரணியன்.

எரிகிறது என் மேனி. குடல் நடுங்குகிறதே! யாரோ அவனைக் கெடுத்துவிட்டார்கள்! அவன் சொன்னதைச்

---

அகங்கனிந்தென் அகந்தன்னில் அமர்ந்தெந் நாளும்
அடிமை யுன்றன் பக்தனென அருள்செய் யாயோ

சொன்னால் நரகம்! நாவும் வெந்துபோம்! என்று நாக்குழறக் கூறி நலிகின்றார் குரு.

இது ராஜ விஸ்வாசமா? பாவ அக்ரமத்திற்குப் பணிவா ?

என்னதான் சொல்கிறான் பார்ப்போம் என்று, தன் இளம் புதல்வனை அழைத்தான் இரணியன். வந்த மகனை எடுத்து மடியில் வைத்தான்.

அப்பா! நீ என்ன சொல்கிறாய்? ஏன் அப்படி நடுங்குகிறார் ஆசிரியர் ?

அவர் இரண்யாய நம: என்றார். நான் நாராயணாய நம: என்றேன். அதற்கு ஏன் அவர் உடல் இப்படி ஆடுகிறது?

கொதித்தது மனம். மகனைக் குப்புறத் தள்ளிய இரணியன் கண்கள் குருதி கொப்புளித்தன. அவனையா, அவனையா அழைக்கிறாய்?

வீணன் அவனைப் பலமுறை அடித்து விரட்டினேன்; கருடன் அருளால் அவன் ஓடி எங்கோ ஒளித்தான். களைப்பு கண்ணை மூட, கடலில் விழுந்தான் என்று கேள்வி!

நம் பகைவனடா அவன்! உன் சிற்றப்பனைக் கொன்ற துரோகி! தெரிகிறதா! நாரணன் பேர் சொல்லவா நான் உன்னைப் பெற்றேன் !

கசிந்த மனத்தினன் மைந்தன்; அடடா! அப்படியா செய்தி! கடல் வண்ணன் பிரபாவம் கூறுகிறேன்; அன்போடு கேள் அப்பா! என்று ஆரம்பித்தான்.

ஆத்திரம் அதிகரித்தது. கொல்லுங்கள் இவனை என்று இரணியன் கொலைஞர்களைத் தூண்டினான்.

சத்திய ஞானச் செல்வனைச் சாகடிக்க, பல வகையில் சதுரங்கம் ஆடினர் பாவிகள்; இதுதான் உலகில் என்றும் உள்ள செய்தி.

---

குகபரனே முருகேசா முனிவர் போற்றும்
குணக்குன்றே எனையுன்னில் கொண்டிடாயோ.

பரந்தாமன் கருணையால் ஒவ்வொரு முயற்சியிலும் பாலன் பிழைத்தான்.

செய்தியறிந்த இரணியன் சீறினன். அவனை என் கையாலேயே கொல்கிறேன் என்று எதிர் வந்தான்.

எங்கேயடா நாரணன்? காதகன் அவனை உடனே காட்டு! இல்லையானல் உன்னைக் கொன்று உன் உதிரத்தை உறிஞ்சி விடுவேன்!

ஆதிமூலனைத் தேடி, எவரும் அலைய வேண்டா! இந்த இடத்திலேயே அவன் இருக்கிருன். சிறியதிற் சிறியோன். அவன் பெரியதிற் பெரியோன், துரும்பிலும் உளன்; இதோ உன் எதிரில் இருக்கும் தூணிலும் கூட இருக்கின்ருனே! உனக்குத் தெரியவே யில்லையே அவன் தூய சொரூபம்! ஹா! அப்பா! இது என்ன பாவம்?

பக்கத்துத் தூணிலா என் பகைவன் இருக்கிருன்? ஆ! ஹா! கோபமாகக் கர்ஜித்துக் கோரமாகச் சிரித்தான். ஓங்கித் தூணை அறைந்தான்; இடிபோல் இருந்தது அந்த அடி.

என்ன வியப்பு! எதிரொலிபோல் முழக்கம் எழுந்தது. கர்ஜனையொடு கல கல நகை. அண்ட கோளமே வெடித்துவிட்டதா என்ன ?

ஆரடா சிரித்தவன்? ஹரி என்பது நீதானே? பக்காத் திருடன் நீ என் அரண்மனையில் பதுங்கி யிருக்கவும் அறிந்தாயோ! என் தம்பியைத் தொலைத்துவிட்டு எனக்கு அஞ்சி ஒளித்த இடம் தூண்! சபாஷ்! ஹஹ்ஹா ஹா!

வீர வெறியில் இரணியன் இங்ஙனம் வீறினன்.

பிளந்தது தூண். பிறந்தது சிங்கம். அண்டாண்டங்களை யெல்லாம் அளாவியது அதன் உருவம். எத்தனை

---

முக்கோணம் தனில்விந்து வடிவாய் நிற்கும்
முதற்பொருளே வந்தருள முன்னி டாயோ

அசுரர் இருந்தனரோ, அத்தனை முகம். முகந்தோறும் மூன்று கண்கள். பிரளயாக்கினியை வெருட்டும் பிடரி மயிர்.

அதிர்ந்தது பூமி. அதிர்ந்தது அண்டம். நற நற என்று பற்களைக் கடித்தபடி வெளிப்பட்டது நரசிங்கம். அப்போதே அழிந்தது அசுர சேனைகள். எண்ணவே அதிர்கிறது இதயம். உதிர வெள்ளம் ஓடுகிறது. இரக்கமே காட்டவில்லை. இயற்கையின் கோர தாண்டவம் இதுதானு?

கும்பிட்டு வாழலாமே என்றுன் குமாரன். வாளைத் தொழுது வாழ்வது அல்லாமல், இந்த மாய ஆளையா யான் வணங்குவேன்! இவனைக் கொன்று உன்னையும் தின்பேன் என்று உறுத்த இரணியன், எம்பெருமானை எதிர்த்தான்.

பயங்கரமான போர். இரணியனைப் பிடித்து மடியிற் கிடத்தி, வயிற்றைக் கிழித்துக் குடரைப் பிடுங்கிக் குருதி குடித்து, அம்மா! அப்பா! ஐயோ! எவ்வளவு பயங்கரம்! இதனுடன் தீர்ந்தது இரணியப் படலம். இது பழைய கதை!

இரணியனைப் போன்றவர் இடையிடை வருவர். அவ்வப்பொழுது தங்கமான பெருமான் சிங்க ரூபம் கொள்வன். இதனல் எவ்வளவு அயர்ச்சி எம்பிராற்கு உண்டாகும்? சோர்வுதீரப் பரந்தாமற்குப் பல்லாண்டு பாடுவம்! இது நம் பரம்பரைக்கே வாய்த்த நல்லபணி!

> எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்; ஏழ்படி
> கால் தொடங்கி
> வந்து வழி வழி ஆள் செய்கின்றேம்; திருவோணத்
> திருவிழவில்
> அந்தியம் போதில் அரியுருவாகி, அரியை அழித்தவனை
> பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்(து) ஆண்டு என்று
> பாடுதுமே!

---

சட்கோணந் தனிலாறு முகமாய்த் தோன்றும்
சத்திசிவ மாமுனது சார்ப தாமோ

(பொ-ரை.) எம் தந்தையும், அவர் தந்தையும், அவருடைய தந்தையும், அவரைப் பெற்ற தந்தையும், அவருடைய பாட்டனும் என்னும் ஏழு தலைமுறையாக, நாம் காலத்தில் வந்து விதிமுறைப்படி கைங்கர்யம் செய்பவர்கள். (எம்பெருமான் அவதாரம் எந்நாளில் நேர்ந்தாலும், அந்நாளைத் திருவோணத் திருநாள் என்று கொண்டாடுகின்ற நாம்,) அத்திருவோணத் திருவிழாவில், சந்தியா கால அந்திப் பொழுதில், நரசிங்கமாகி, பகைவனை இரணியனை அழித்த அந்தப் பரமனுக்கு, (அந்த) அயர்வு தீரப் (பழைய மரபைத் தழுவி) பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று சிறந்த மங்களா சாஸனம் செய்வம், (எ-று).

எம் தந்தை என்பது எந்தையென மருவியது. படிகால்-கால்வழி; வழி வழி; பரம்பரையாக எனினுமாம். பந்தனை-நெருக்கம்; அயர்ச்சி.

பக்தர்கள் நீங்கள், பரம்பரைத் தருமத்தை அனுசரித்துப் பல்லாண்டு பாடுங்கள் என்று அன்பொடு அழைக்கின்றார் ஆழ்வார். ஆம். நாமும் வாழ்வதற்கு அதுதான் வழி!

---

## கந்தர் அநுபூதி

(கி. வா. ஜகந்நாதன்.)

சாமானிய மனிதர்களுக்குத் தான் ஆசை அதிகம் உண்டு என்று நாம் நினைக்கிறோம். ஆனால் கவிஞர்களுக்கும் பக்தர்களுக்கும் கூட பேராசை உண்டு. நம்முடைய ஆசைக்கும் அவர்களுடைய ஆசைக்கும் வேறுபாடு இருக்கத்தான் இருக்கிறது. அன்பர்கள் எப்பொழுதும் ஆண்டவனுடைய திருவருளிலே ஊறிக் கிடக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். "ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே"

---

நக்கீரர் புலிப்பாணி முதலாம் சித்தர்
நாயகனே! உனதருளை நண்ணு வேனே

என்று மாணிக்க வாசகர் பேசுகிறார். அவர்களுக்கு எப் பொழுதும் தம்முடைய ஆற்றல்களை யெல்லாம் கொண்டு இறைவனுடைய புகழைப் பாடிக் கொண்டே இருக்கவேண் டும் என்று தோன்றுகிறது.

அருணகிரிநாதர் எத்தனையோ திருப்புகழைப் பாடினார். அவருக்கு முன்னால் அத்தகைய அற்புதமான சந்தப் பாடல் களைப் பாடினவர்கள் யாரும் இல்லை. 'பூர்வபச்சிம உத்தர தக்ஷிண திக்குள பக்தர்கள் அற்புதம் என ஓதும்' சந்தப் பாடல்களை யெல்லாம் பாடினவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. இன்னும் பாடவேண்டும், இன்னும் பாடவேண்டும் என்ற ஆசை எழுந்தது. அந்த ஆசை ஒரு காலக்கு ஒருகால் மிகுந்து கொண்டே வந்தது. ஆசை கூர்ந்தது. அதை அவரே சொல்லுகிறார்.

"ஆசைகூர் பக்தனேன்!"

'ஆண்டவனே; நான் உனக்குப் பக்தன்; ஆசை அற்று விட்ட பக்தன் அல்ல; மேலும் மேலும் எனக்கு ஆசை எழுந்து ஓங்குகின்றது'— இப்படிச் சொன்ன மாத்திரத்தில் அவருக்குப் பெண்ணாசையோ, பொன்னாசையோ, மண்ணா சையோ இருக்கிறது என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. அவருடைய ஆசை என்ன என்பதை அவரே சொல்லு கிறார். "நான் உன்னுடைய திருவடிக்கு அழகான மாலை சூட்ட வேண்டும் என்ற ஆசை மிகுந்து வருகிறது" என்று பேசுகிறார்.

அருணகிரிநாதர் அவனுடைய பாதத்தைக் காணு கிறார். அது செக்கச் செவேலென்று பவளம் போல் மிக அழகாக இருக்கிறது. அழகான குழந்தையின் காலைக் கண்டு உண்மையான அன்புடைய தாய் என்ன நினைக் கிறாள்? இந்தக் காலுக்கு மிக அழகான தண்டை அணிந்து பார்க்க வேண்டும்; சிலம்பு அணிய வேண்டும்' என்று நினைக்கிறாள் அல்லவா? அப்படி எம்பெருமானுடைய 'கோலப் பிரவாளப் பாதத்'தைக் காணுகின்றார், அருண

---

எக்காலம் அடியவர்போல் அருளைப் பெற்றே
இன்புறுவேன், எம்மான்நீ இசைத்தி டாயோ

கிரிநாதர். 'இந்தப் பிரவாளப் பாதத்துக்கு அழகான மாலை ஒன்று அணியவேண்டும்' என்கிற நினைப்பு வருகின்றது.

தோட்டக்காரன் ஒருவன் இருக்கிறன். அவனுடைய வீட்டிலே கல்யாணம். அந்தத் தோட்டம் முழுவதும் மல்லிகை வைத்துப் பயிரிட்டிருக்கிறன். அவன் வீட்டுக் கல்யாணத்தில் என்ன மலர் மாலைகள் அதிகமாக இருக்கும் என்று சொல்ல வேண்டும். ரோஜாப் பூத்தோட்டம் போட்டிருக்கிறன் ஒருவன். அவன் வீட்டிலே மணம் நடந்தால் ரோஜாப் பூ மாலையாகக் குவித்துவிடுவான். அருணகிரி நாதருக்கு எந்தவித மலர் கிடைத்திருக்கிறது? நமக்கெல்லாம் கிடைக்கும் மலர், மாலையிலே அலர்ந்தால் காலையிலே வாடிவிடுகிறது. காலையிலே அலர்ந்தால் மாலையில் வாடிவிடுகிறது. ஒரு வேளைக்கு அப்பாலே அதன் பொலிவு மங்கி மறைந்து விடுகிறது. அருணகிரிநாதரிடம் இப்படி ஒருவேளை மலர்ந்து மறுவேளை வாடும் மலரா இருக்கிறது? இன்னும் சிறந்த மலர்கள் அவரிடத்திலே உண்டு. அவற்றைக் கொண்டு இறைவனுக்கு அழகான மாலையை அணிந்து அழகு பார்க்கவேண்டும் என்று நினைக்கிறர். அப்படி நினைப்பதற்கு முன்னலே, 'நாம் இத்தனை ஆற்றல் பெற்றிருக்கின்றேம்' என்ற நினைவு அவருக்கு இல்லை. இறைவனுடைய திருவருளால் சொற் செல்வம் பெற்றவர் அவர். தம்முடைய ஆற்றலால் பாடிவிடலாம் என்று அவர் தொடங்கவில்லை. இறைவனிடத்திலே தம்முடைய ஆசையைச் சமர்ப்பித்துக் கொள்கிறர். "முருகப் பெருமானே; உன்னுடை அழகான பவளம் போன்ற திருவடிக்கு நறுமலர் மாலையைச் சூட்டவேண்டும். உலகினர் சூட்டும் மலர் மாலை அன்று அது. நல்ல மாலையாக, வாசம் பொருந்திய மாலையாக, வண்டுகள் எல்லாம் மொய்க்கும் மாலையாக அது இருக்கவேண்டும்" என்கிறர். ஆனல் அந்த மாலை உலகில் நாம் காணுகின்ற வண்டுகள் மொய்க்கின்ற மாலை அல்ல.

---

முக்கண்ணன் முகமைந்தோ டன்னை சத்தி
முகமொன்றும் உனையெண்ணும் முதன்மை யீவாய்

அது என்ன மாலை? அவர் சொல்லுகின்றார். "ஆசை கூர் பக்தனேன், மனேபத்மமான பூ வைத்து நடுவே" என்று ஆரம்பிக்கின்றார்.

மாலையில் பல வகைகள் உண்டு. கழுத்தில் போடுகின்ற மாலை மார்பிலே தொங்கும். தொங்குகின்ற இடத்தில் ஒரு குஞ்சத்தைக் கட்டியிருப்பார்கள். மார்பில் அணியும் மாலையைத் தார் என்பார்கள். தலையிலே போடுவதற்குரிய மாலை வட்டவடிவமாக இருக்கும். அதற்கு இண்டை என்று பெயர். கையிலே அணியும் மாலையும் வட்டவடிவமாக இருக்கும். ஆனல் மார்பில் தொங்க வேண்டுமானல் அதில் ஒரு குஞ்சம் இருக்கவேண்டும். "நான் அணிகிற மாலைக்கு ஒரு குஞ்சம் இருக்கவேண்டும். அந்தக் குஞ்சம் என்னிடம் இருக்கின்றது. மனம் என்னும் தாமரைப் பூவை நடுவிலே வைத்து, சொல் மலர்களால் ஒரு மாலை கட்டவேண்டும்" என்கின்றார். இறைவனுடைய புகழைப் பாடும்பொழுது மனமாரப் பாடவேண்டும் என்ற கருத்தைத்தான் அப்படி உருவகமாகப் பேசுகின்றார்.

இனி, மாலைகட்டத் தொடங்க வேண்டும். மாலை கட்டுவதற்கு இரண்டு பொருள்கள் மிக அவசியம். ஒன்று நார்; மற்றென்று மலர். இங்கே எந்த நாரைக் கொண்டு தொடுப்பது? எல்லா மலர்களுக்கும் ஊடே சென்று எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திக் கட்டும் நாராக அது இருக்கவேண்டும். எத்தனை பேசினலும் என்ன அலங்காரம் செய்தாலும், மனத்திலே செறுக்கு இல்லாமல், இறைவனிடம் நிறைந்த அன்பு இருக்கவேண்டும். அது எல்லாச் சொற்களுக்கும் இடையிலே சுருதி போல இழையவேண்டும். அந்த அன்பையே நார் ஆகக்கொள்ள வேண்டுமாம்.

"மனேபத்மமான பூ வைத்து நடுவே அன்பான நூல் இட்டு"

பின்பு கட்டவேண்டும். கையினலே கட்டுகின்ற மாலை அன்று இது. நாவினலே கட்டுகின்ற மாலை. மிகவும் அழகாக நாவினலே கட்டவேண்டும்.

---

திக்கெல்லாம் ஒரு நொடியில் சுற்றி வந்த
தேவநுட்பம் தேர்கவெனத் தெளித்தி டாயோ

**"நாவினுலே சித்திரமாகவே கட்டி."**

இந்த மாலையிலே என்ன மணம் வீசும்? ரோஜாப் பூவிலே அதற்கென்று தனி வாசனை உண்டு. மல்லிகைப் பூவிலே அதன் மணம் இருக்கும். மகிழம் பூவிலே அதற்கென்று சிறப்பாக அமைந்திருக்கிற மணம் வீசும். சொல் மலர்களால் அமைந்த இந்த மாலையிலே என்ன மணம்! இறைவனுடைய திருவருள் நினைவாகிய மணம் வீசும். அதைத்தான் ஞானம் வீசும்படியாக இந்த மாலை மிளிர வேண்டும் என்று ஆசைப்படுகிருர் அருணகிரிநாதர்.

**"ஒருஞான வாசம் விசிப் பிரகாசியா நிற்க."**

மணமும் வேண்டும்; ஒளியும் வேண்டும். அதற்கு நல்ல மணம் இருக்கிறது என்பதை யார் சொல்லுவது? கட்டினவன் சொல்லலாமா? வியாபாரக்காரன் மாலையைக் கொண்டு வந்து, "ஐயா, இது மிகவும் மணமுள்ள மாலை" என்று சொன்னுல், அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வாங்குகிறவன் இது நன்ருகத்தான் இருக்கிறது என்று ஒப்புக்கொண்டால் அதற்கு உரிய விலையைக் கொடுப்பான். இங்கேயோ அருணகிரிநாதர் மாலை கட்டு கிருர். அந்த மாலை வாசனை உள்ளது என்று அவரா சொல்வது? வாசனையைப் பற்றித் தெரிந்து கொண்டவர் கள் இது நல்ல வாசனை யுடையது" என்று சொன்னுல், அது உண்மையான சிறப்புள்ளதாக இருக்கும்.

வாசனையைத் தெரிந்துகொள்வதற்கு மனிதர்கள் சிறந்தவர்கள். அவர்களிடம் மூக்கு இருப்பதனுலே என்று நினைக்கிருேம். எல்லா வாசனைகளேயும் அவர்கள் உணர முடியாது? தாமரையில் உள்ள மெல்லிய வாசனையைத் தம்முடைய மூக்கினுலே உணர முடியாத மக்கள் இருக் கிருர்கள். நெடியான வாசனைகளைத்தான் அவர்கள் விரும்பு கிருர்கள். அத்தரையும் செண்டையுந்தான் அவர்கள் வாசனையுள்ள பொருளாகக் கருதுகிருர்கள். ரோஜாப் பூத்தான் அவர்களுக்கு மணமுள்ளதாகத் தோற்றுகின்றது. "கமல மலரிடத்திலே வாசனை எங்கே இருக்கின்றது?"

---

அக்கரனே அடியவர்தம் அன்பே! நெற்றி
அக்கினியில் தோன்றுமுனே அறிய ஆமோ

என்று அவர்கள் கேட்கிறார்கள். தெருவிலே உள்ள புழுதி எல்லாம் புகுந்து புகுந்து மூக்கிலே உள்ள நரம்புகள் எல்லாம் தடித்துப் போன நமக்கு மிக மென்மையான மணம் தெரிவதில்லை.

ஆனால் மணத்தின் பலவகை நிலைகளையும் நன்கு ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்கு, நம்மைக் காட்டிலும் வன்மையுடைய ஒரு பிராணியை ஆண்டவன் உலகத்தில் படைத்திருக்கின்றான். அந்தப் பிராணிதான் வண்டு. வாசனை அறிவதில் தேர்ந்தது. சங்ககாலத்து நூலாகிய **குறுந்தொகையிலே**, ஒரு தலைவன் தன்னுடைய நாயகியின் கூந்தலிலே மணம் இயற்கையாக அமைந்திருக்கின்றது என்று சொல்ல வருகிறான். அப்படிச் சொல்லும் பொழுது, 'மணத்தை நாம் அறிந்ததுமட்டும் அன்று. மணம் தேர் கின்ற நிபுணர்கள் (Experts) ஆக இருக்கின்ற வண்டைக் கேட்டால் தெரியும்' என்று நினைந்து, அந்த வண்டைப் பார்த்துக் கேட்பதுபோலப் பாடுகிறான்; "கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" யென்று. இப்படியே **சீவகசிந்தாமணியி**லும் ஒரு கதை வருகின்றது. நல்ல மகரந்தப் பொடிகளை எல்லாம் கூட்டிச் சுண்ணத்தை ஒருத்தி தயாரித்தாள். அவளோடு மற்றொருத்தியும் சுண்ணம் தயாரித்திருந்தாள். இந்த இரண்டு பேர்களுடைய சுண்ணங்களிலும் எது சிறந்தது என்கிற போட்டி வந்தது. அப்போது எல்லாக் கலைகளிலும் வல்லவனாகிய **சீவகன்** அங்கே வந்தான். அவன் இரண்டு பேர்களுடைய சுண்ணங்களையும் கையிலே எடுத்துக் கொண்டான். இரண்டு சுண்ணத்தையும் வானத்திலே தூவினான். ஒருத்தியினுடைய சுண்ணத்தில் வானத்தில் பறக்கும் பொழுதே வண்டுகள் வந்து மொய்த்தன. இதுதான் சிறந்த சுண்ணம் என்று சொன்னான்.

(தொடரும்)

---

அக்கரத்தில் ஆடுமொரு சோதி மூர்த்தீ
அருள் புரிவாய் யோக சித்தி அடியனேற்கே

# சங்கர பத்தர்

(ரசபதி)

மகாகாலம் என்பது ஒரு மாபெரும் தலம். அது வடநாட்டுத் திருப்பதி. அப்பதியில் ஒரு அறிஞர் இருந்தார். விஸ்வகர்ம குலத்தவர்; அவர் பெயர் சங்கரபத்தர். எத்தனையோ சிவாலயங்கள், அவர் காலத்தில் எழுந்தன. கலைஞானம் கைவந்த அவர், பரஞானம் பழுத்த பரம பக்தர்.

மூன்று கட்டு வீடு. கடைசிக் கட்டில் சமையல் அறை; முதற்கட்டின் முகப்பில் தொழிற்சாலை; நடுக்கட்டில், ஓய்வுள நேரமெல்லாம் சிவ பஜனை. சிவ சின்ன தாரணரான பத்தரை, சாதுக்கள் பலர் சந்திப்பர்.

சங்கரா சிவ! சங்கரா சிவ! சங்கரா சிவ சங்கரா !!

என்று பரவசத்தோடு பக்தர்கள், அவர் மாளிகையில் இடையிடை பாடியபடியே இருப்பர். கற்பிற் சிறந்த அவர் மனைவி கமலினி, மகிழ்ந்து அடியவர்கட்கு மகேஸ்வர பூஜை நடத்துவள்; என்றும் உள்ள செய்தி இது.

* * *

பானுமதி என்பது ஒரு பழைய பட்டினம். சிறப்பு மிக்கது அவ்வூர்ச் சிவாலயம். கோயில் தர்மகர்த்தர் சுகபதிச் செட்டியார். வள்ளல்கள் பரம்பரையில் வந்த அவர், வாள் வித்தையிலும் வல்லவர். பெருஞ் செல்வாக்கு எதிலும் பெற்றவர். அவருடைய முன்னோர்கள் கட்டியது அக்கோயில்.

---

கும்பமுனிக் குபதேசம் செய்த கோனே
குருபரனே நின்னடிச்சீர் குணிக்க ஆமோ

மூலஸ்தானத்தில் லிங்கம் உண்டு; பரிவார தேவதைகளும் ஆகம விதிப்படி அமைந்துள்ளன. நித்திய பூஜைகள் நியதியாக நடைபெறுகின்றன. எனினும் ஒரே ஒரு குறை!

உற்சவ மூர்த்திகள் இல்லை. இருந்தால், வீதி விழாவை விமரிசையாக நடத்தலாம். இந்த எண்ணம் நினைவில் எழுந்தது. புனிதபக்தர் செட்டியார் விரைந்து புறப்பட்டார். தம் ஊருக்கு அருகில் உள்ள மகாகாலத்திற்கு வந்தார். சங்கர பத்தரைச் சந்தித்தார். ஆர்வத்தொடு தமது எண்ணத்தை அறிவித்தார்.

சுகபதி அன்பரே! இது யூகம் நிறைந்த சிறந்த யோசனைதான். ஆற்று வெள்ளம் கடலிற் பாயும்; அது போல், ஆன்ம வெள்ளம் அருள் நிறைவில் தோயும். அப் பேறு நேர, உணர்ந்து ஒன்றுவதே யோகம். உயர் ஞானச் சுடராக இறைவன், அன்னவர்தம் உள்ளத்தின் உள்ளான்; நிகழும் இதுவே சுத்தாத்ம நிலை. விமலன் விசுவாத்மா. இந்நிலை சில கால அனுபவம். இரண்டற்கும் மேலது பரமாத்மா. இறுதி அனுபவம் இது. இம் முப்பேறும் பெற்றவரே ஜீவன் முத்தர்கள்.

இவர்கட்கு ஆதரவு காட்டுவோர், தங்களைப் போன்ற அன்பர்கள் தான். நியதியொடு விழா நிகழ்ந்தால், சேவை செய்பவர்க்குச் சிவபுண்ணியம் சித்திக்கும். அதன் பின் ஒவ்வொரு பேறும் ஓங்கி உயரும்.

உற்சவ மூர்த்தியை, இரு மாதத்தில் உரு வார்த்துத் தருகிறேன். அதன்பின் ஆவனவற்றிற்கு இன்றிருந்தே முயலுங்கள் என்று, பரம அன்பொடு கூறினார் பத்தர்.

* * *

சிவனார் திருவுரு, குறித்த தவணையில் சிறப்பாக அமைந்தது. செய்தி அறிந்தார் செட்டியார். பலருடன் வந்து பார்த்தார். உற்சவர் திருவுருவம், உள்ளத்தைத் தொடு

---

உம்பர்கோன் முதலானோர் துன்பம் தீர்த்த
உக்கிரவேல் பாணிபுகழ் ஓத ஆமோ

கிறது. பத்தரைப் பலபடப் பாராட்டினர். சிறந்த சன்மானம் பல செய்தார்.

புனித மூர்த்தியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். கண்டார் மகிழும் கந்தவதி நதி, பானுமதி நகர்ப் புறத்தே பாய்ந்து ஊர்க்கு வளத்தை உதவுகிறது. வளரொளி விக்ரகத்தை, அந்நதியில் வாய்த்த இடத்தில் செட்டியார் ஜலவாசமாக வைத்தார். மற்றுமுள்ள செயல் செய்யச் சென்றார்.

கும்பாபிஷேகத்திற்கு நாளும் குறிக்கப் பெற்றது. ஹோமாதிகட்கு ஆன சாமக்கிரியைகள் சேகரம் ஆயின. பரமன் கோயில் முழுதும் பந்தரிடப் பெற்றது. தோரண மாகப் பூமாலைகள் தொங்குகின்றன. நல்ல ஓரையில் துவஜா ரோகணம் நடந்தது. வாத்திய ஒலி வானளாவியது. தெளிந்த பக்தர்கள், எங்கெங்கிருந்தோ பெருவாரியாகத் திரண்டு வந்துளர். நம் சங்கர பத்தரும் வந்திருக்கிறார்; வைதிக கோலமுடைய அவரைப் பலர் வணங்குகின்றனர்.

* * *

பக்தர் பலர் தொடர, சுகபதிச் செட்டியார், புனித வைதிகராய்ப் புறப்பட்டார். அரிய நதி தீரத்தை அடைந் தார். கரையில் செய்ய வேண்டிய நியதிகளை நிறைவேற்றி னர். அதன்பின், ஜலாதிவாசமாக வைத்த இடம் சென்று, இன்பத்துடன் விக்ரகத்தைத் தாமே எடுக்க முயன்றார்.

என்ன வியப்பு! எங்கே விக்ரகம்? பதைப்புடன் துழா விப் பார்க்கிறார். தேடவேண்டா இடங்களிலும் தேடுகிறார். திகைப்பு மிகுகிறது. மனம் குழம்புகிறது. அவருடைய பிரசித்தி பொறாத பங்காளிகள், விக்ரகத்தைக் களவாடி வேற்றூர்க் கோயிலில் வைத்துவிட்ட செய்தியை அவர் எப்படி அறிய முடியும்? கரையேறி நோக்கினர். பெரு மூச்சுப் பிறந்தது. பெருகுகிறது கண்ணீர்.

---

ஆயிரத்தெட்(டு) அண்டமதை ஆண்ட சூரன்
அழியவேல் விடுத்த அருள் அறிய ஆமோ

கோயிலில் மேளம் குமுகிறது. கும்பாபிஷேகச் செயல்கள் அங்கே குறைவின்றி நடைபெறுகின்றன. யாகசாலை ஆரம்பிக்கப் பட்டுளது. அவைகளை உணரும் பொழுதே உள்ளம் துடிக்கிறது; ஆடுகிறது உடல்.

எம்பெருமான் திருக்கூத்தோ இது? இன்றேல் இந்த அநியாயத்தை எவர் செய்யத் துணிவர்? எவ்வளவு பெரிய அவமானம்? என்ன செய்தி என்று கேட்கும் இத்தனை லட்சம் பக்தர்கட்கு யான் யாது பதில் சொல்வேன் ?

வாழேன் உயிர் வாழேன் என்று படபடத்தது வாய். பளபளத்த வாள், எப்பொழுதும் இவருடைய காப்பாளனுடைய கரத்தில் இருக்கும். அண்மையில் இருந்த அவனிடமிருந்து அதை வெடுக்கென்று பிடுங்கினர். உறையில் இருந்த வாளை உருவினர்.

அங்கு வந்த சங்கர சில்பி, ஒரு நொடியில் விஷயத்தை உணர்ந்தார்.

அடடா! பொறும் பொறும் என்று விரைந்து ஓடி வந்தார். எடுத்த வாளைப் பிடுங்கி எறிந்தார்.

அன்பரே! வாழ்க்கையில் சோதனை வருவது இயற்கை. வெற்றிக்கு முயல்வதை விட்டு, உயிரை விடுவதால் பயன் இல்லை. உமது கவலையை உணர்கிறேன். இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை. இன்னும் கும்பாபிஷேகத்திற்கு மூன்று நாள்கள் இருக்கின்றன. அதற்குள் வேறு ஒரு விக்ரகத்தை, என் சொந்தச் செலவில் வார்த்துத் தருகிறேன். வருந்த வேண்டா என்று தேற்றி, அவரை அவர் வீட்டில் கொண்டு போய் விட்டு, தம் ஊர் நோக்கி விரைந்தார்.

* * *

சோதனை தாங்கக் கூடியதாயின் சமாளிக்கலாம். தலைக்குமேல் வெள்ளம் சாண் போனாலும் முழம் போனாலும் இரண்டும் ஒன்றுதானே.

---

மாயமெனும் கிரவுஞ்ச வரை பிளந்தாய்
மாறிவரும் அசுரரையும் மடித்திட் டோனே

விறுவிறுத்து நடந்த சங்கர பத்தர்க்கு, வழியிலேயே தாபசுரம் வந்தது. அது, வீடு நோக்கி வரவர வலுத்தது. படபடத்து வந்து படுத்தார். எழுந்திருக்கவும் முடிய வில்லை. அவர் தேவி கமலினி, ஆன சிகிச்சை அத்தனை யும் செய்தாள். விழலுக்கு இறைத்த நீர் போல், பயன் தான் விளையவில்லை.

மறுநாள் உதயத்தில் சுகபதி வந்தார். சில்பியார் உள் ளம், அவரைக் கண்டு அதிர்ந்தது.

என்ன இது? படுத்துக் கொண்டிருக்கிறீரே! நாளை காலை பத்து மணிக்குக் கும்பாபிஷேகம் என்பதை மறந்து விட்டீரா என்ன? வேலை எவ்வளவு தான் ஆகியிருக்கிறது? நான் பார்க்கலாமா என்று பதைத்துக் கேட்டார் வந்த பக்தர்.

தன் உடல் நிலையை உரைத்தால், சுகபதி தற்கொலை செய்து கொள்வரே என்று அஞ்சியது சில்பியார் நெஞ்சம். பாதகம் என்று ஆபத்தில் பார்க்க வேண்டாம் என்கிறது உள்ளுணர்வு. எப்படியும் ஜுரம் இன்று தணியலாம். ஒரே மூச்சாக முயன்று, நாளை உதயத்திற்குள் விக்ரகத்தை உருவாக்கிவிடலாம் என்று நம்பியது வம்பு மனம்.

அன்பரே! வீணான கவலையை விடும். முயன்று அயர்ந்து படுத்தேன்; இதற்குள் நீர் வந்துவிட்டீர். நாளை பத்துமணிக் கெல்லாம் குதூகலம் விளைய யானே விக்கிர கத்தைக் கொண்டு வருகிறேன். போய் மற்ற வேலையைப் பாரும்!

சில்பியாரே! அன்பான உமது வார்த்தைகள் கேட்டு ஆறுதலடைகிறது மனம். உரிய காலத்தில் விக்கிரகம் வர வில்லையேல், வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண் டியதுதான். என் உயிர் இனி உம் கையில் உளது! வரு கிறேன் என்று சென்றார் சுகபதி.

---

அப்பா நீ என்கவலை தன்னை இன்னும்
ஆற்றாமல் இருப்பதுவும் நீதி யாமோ

வர வர தாப ஜ்வரம் வலுத்தது. பகல் போய், மாலையாகி, இரவெலாம் கூட நித்திரையே யில்லை; கண்ணீர்விடுகிறுள் கமலினி.

கண்ணுதல் பரமா! கருணை ப்ரபோ! மாங்கல்ய பிட்சை வேண்டுகிறேன். உம்மை யல்லாமல் வேறு கதி ஏது?

பூஜையறையில் இப்படிப் பொருமிய கமலினி, நீறு கொண்டு வந்து கணவர் நெற்றியில் தடவினள்.

பொழுது விடிய இன்னும் ஐந்து நாழிகைதான் இருக்கிறது. எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் இருக்கும் சங்கர பத்தர், எண்ணுதும் எண்ணி மனம் இடிகின்ருர்.

புகன்ற வாக்குப் பொய்ப்பதோ! தீவினை என்னைப் படுக்கையில் தள்ளி, தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கிறதோ! உரிய காலத்தில் விக்ரகத்தை உதவவில்லையென்று, உத்தம பக்த சுகபதி தன் உயிர்மாய்த்துக் கொள்வரே! அந்தக் கோரக் காட்சியைக் காணுமுன், வாக்குத் தவறிய என் பிராணனை மாய்த்துக் கொள்வதே மரபு. நல்ல வேளை! கமலினியும் சமயல் கட்டிற்குள் போயிருக்கிருள்; இதுதான் சமயம் என்று எழுந்தார். தள்ளாடித் தடுமாறி நடந்தார். வீதிக் கோடியில் உள்ள கிணற்றை அணுகினுர். ஆம். ஆழமான அதிபயங்கரக் கிணறு அது!

உச்சிமேல் கைகளை உயர்த்தினுர். ஜகதீசா! கைலாசவாசா! திரிநேத்திரா! எம்பெருமான் திருவுருவைச் சமைத்துத்தரத் தவறிய ஊழுடையேனைப் பூமி சுமப்பது பாபம். பிரபோ! எளியேனை ஏன்றுகொள்! என்று பொருமிப் பொருமிப் புலம்பினுர். துடிப்பு மிகுந்து, கிணற்றில் வீழ்வதற்குத் துணிந்தார்.

* * *

யாரடா அவன்? பித்தம் தலைக்கேறியவன் போல் என்னென்னவோ பிதற்றுகின்ருயே! என்னடா செய்கிருய் கிணற்று ஓரத்தில்? சீ! இப்படி வா! வருகிருயா இல்லையா?

---

சித்த வித்தை தந்தஒரு சித்மயேசா
சிவாநந்த நின்னடிக்கீழ் சேர்வ தென்ருே

உருத்து எழுந்த குரல் கேட்டுத் திடுக்கிட்டுச் சிலிர் யார் திரும்பி நோக்கினர். விபூதி உருத்திராக்க தாரணம். பழுத்த பழம்; எனினும் எடுப்பான தோற்றம். இடையில் செவ்வொளிப் பட்டாடை.

என்னையே நோக்கி வருகிறாரே! மீறி வீழ்ந்தால் விறிக் கூவுவார்! ஊர் திரளும். என்னை எடுப்பர். கரைமேல் போடுவர். வீணாய்விடுமே என் எண்ணம். இவரைத் தந்திரமாக அனுப்பிவிட்டு, அதன் பின் நம் நினைவை நிறைவேற்றுவோம் என்று துணிந்தார்.

நமஸ்காரம் ஸ்வாமி! என்ன செய்யவேண்டும் இந்த அடிமை!

பசி காதையடைக்கிறது. கண்ணிருண்டு போகிறது. உணவு கண்டு மூன்று நாளாயிற்று. என் பசியை முதலில் அகற்றிவிடு! அதன் பின் நான் யார் என்று அறிவை! புண்ணியம் உண்டு; உனக்குப் புகழும் விளையும். இல்லையானால், என்மரணப் பழி உன் தலைமேல்தான் ஏறும்.

இது என்ன சோதனை? உயிரை விடவந்த இடத்தில் விருந்தினர் வருகை. உணவிடாவிடில் உயிர் போய்விடும் என்கிறார்! சுகபதி உயிர் விடுவாரே! அதை எண்ணுகிற போதே குடர் குழம்புகிறதே! அவருக்கு முன் நான் முந்திக் கொள்ள முயன்றேன்! என்ன இது? எல்லாம் உயிர் போகிற கதையாகத்தானா அமையவேண்டும்? பேஷ்! எதற்கும் இவர் பசியை ஆற்றுவம்; அதன் பின் எதையும் சிந்திப்பம் என்று எண்ணினர். அடியவரை அழைத்துக் கொண்டு தன் திருமாளிகையை அடைந்தார்.

* * *

எங்குப் போயிருந்தீர்கள்? என்றாள் எதிர்வந்த மனையாள்.

---

சித்தர் சங்கம் அதுபோற்றும் தேவர் கோவே
சிவஞான மென்தன்னில் செறித்தி டாயோ

அஃதிருக்கட்டும் கமலா! பிறகு சொல்கிறேன். ஸ்வாமி வந்திருக்கிருர் பார்! சீக்கிரம் சமையல் ஆகட்டும். அதற்கு முன் அயற்சி அகல, ஏதேனும் முதலில் உதவினல் நலமா யிருக்கும்.

இன்றுடன் மூன்று நாளாகத் தாங்கள் பூஜையறை யிலேயே போகவில்லையே. ஜுர வேகம் கண்டு பயந்து, நானும் தங்கள் பக்கத்திலேயே இருந்துவிட்டேன். இன்று ஸ்வாமிக்குப் பாயஸ நிவேதனம் செய்யலாம் என்று சித்தம் பண்ணி யிருக்கிறேன்.

அம்மா! அம்மா!! அதை முதலில் இப்படிக் கொடு! என்னல் தாங்கவே முடியவில்லை. உன் ஸ்வாமிக்கு வேண்டு மேல் பிறகு சித்தப் படுத்திக் கொள்! என் தாபம் அப்படி யிருக்கிறது. காதைக் குப்பென்று அடைக்கிறதே அம்மா! என்று துடியாய்த் துடித்தார் அடியார்.

ஓடிய கமலினி பாயசத்தோடு விரைந்தாள். சில்பியார் வாங்கியளித்த அதை, ஆயாசம் தீர, மடக் மடக்கென்று ஆர்வம் கொண்டு பருகினர்.

பெரிய குவளை; அடே அப்பா! என்ன ஆநந்தமா யிருக்கிறது? இவ்வளவு சுவையுடைய பாயசத்தை இது வரை நான் அனுபவித்ததில்லை. பசியை யாற்றியது; ருசி யாகவும் இருக்கிறது. இன்னும் சிறிது கிடைக்குமா?

ஆஹா கொண்டு வருகிறேன் என்று கமலினி, பின் கட்டிற்கு ஓடினள். உடன் தொடர்ந்தார் சில்பியார். மிச்சமிருந்த பாயசத்துடன் இருவரும் திரும்பினர்.

* * *

எங்கே அடியார்? ஸ்வாமீ! ஸ்வாமீ! என்ன இது? ஏன் என்ற பதிலே இல்லையே!

புறக்கடைப் பக்கம் போய்ப் பார்! என்று மனைவி யைப் போக்கி, முன்கட்டிற்கு வந்தார்.

ஸ்வாமீ! ஸ்வாமி!

---

உத்தமனே உரகஉருப் பூண்ட நாதா
உன்பாத கமலத்தை உறுத லென்றே

ம்....ம்....ம்....ம்...என்று முனகல் சத்தம் கேட்கிறது.

என்ன வியப்பு! தொழிற்சாலையி லிருந்து வருகிறதே இவ் ஒலி. அங்குப் போயிருப்பாரோ ஒரு வேளை. அங்கு விரைந்தார். ஆம். கதவுகூட திறந்திருக்கிறதே! ஓடிவந்து உள் நுழைந்தார்.

ஆஹா! என்ன இது? அரோஹரா அரோஹரா என்று எழும்பிக் குதித்த சில்பியாரின் தாபஜ்வரம், மாயமாக எப்படியோ மறைந்து விட்டது

என்ன அற்புதம்! அழகொழுகும் திவ்ய மங்கள சிவ விக்கிரகம். இப்பொழுதுதான் வேலை பூர்த்தியாகி யிருக்கிறது. பெட்டியில் இருந்த செதுக்கும் ஆயுதங்களும், இறைந்து பக்கத்தில் இருக்கின்றன. செதுக்கிய தூள்களும் சிதறிக் கிடக்கின்றன. கருக்கட்டி வார்த்த உலையிலும் அனல் இருக்கிறது.

ஒரு நாளில் முடிவது அல்லவே இது! சாட்சாத் சிவபிரானே யன்றி, சுலப காலத்தில் இவ்வுருவைச் சித்தப்படுத்த எவராலே முடியும்? அடியார் உருவில் வந்தவன், என் ஆண்டவன்தானோ?

ஜகதீசா! பிழைத்தேன்! செட்டியாரும் பிழைத்தார்! ஏன், உலகிற்கே நல்ல காலம் பிறந்துவிட்டது என்று கூவிக் கூவித் தம்மை மறந்து, குதித்துக் குதித்துக் கும்மியடித்து, இன்பக் கண்ணீரை யிறைத்துப், பாடியாடிப் படபடக்கிறார் பத்தரான பக்த சிகாமணி.

அலறும் இக்குரல்கேட்டு ஓடிவந்தாள் கமலினி. விக்ரகத்தைக் கண்டாள்; பதியால் விவரம் உணர்ந்தாள்; ஆவேசம் வந்தவள்போல் அலறினள்.

என் அப்பா! ஏழை செய்த பாயசத்தை என்று கொண்டாயோ பெருமானே! பாயசப் போக்குக் காட்டி, களிப்பூட்டும் விக்ரகத் திருவுருவில், நின்னைக் காட்டுகின்

---

நித்த நித்தம் என்மனத்தில் நிறுத்தி உய்ய
நின்னருட்கண் பாலிப்பாய் நியதி வேலே

ருயோ கண்ணுதால்! என்று கதறும் கமலினியின் புனித இதயத்திலிருந்து பொங்கி வழிகிறது கண்ணீர்.

**விக்ரகம் வைத்தோம்; அதில் யாம் உளம்! பாயசம் நமக்குப் பரமதிருப்தி. இதை ஆலய நிர்வாகிகட்கு அறிவி !**

என்று அருளொடு பிறந்தது அசரீரி. செவி குளிரக் கேட்ட தம்பதிகள், சிவா! சிவா என்று வீறிட்டுக் கூவி வீழ்ந்தனர். பரவசம் மிகுந்து தம்வசம் இழந்தனர்.

* * *

காலை மணி எட்டு. இருப்பதா! இல்லை யிறப்பதா! ஒரு விநாடிக்குள் இரண்டில் ஒன்று தெரிந்துவிடும் என்ற நினைவுடன், சுகபதிச் செட்டியார், சில்பியாருடைய புனிதத் தொழிற்சாலையுள் புகுந்தார்.

கடவுள் திருவுருவைக் கண்டார். அதன் முன் சில்பத் தம்பதிகள் மூர்ச்சித்துக் கிடப்பதையும் கண்டார். ஒன்றுமே தோன்றவில்லை. ஆனந்த பரவசத்தால் அரோஹரா என்று அலறினர். இறை உருவிற்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

தம்பதிகளின் தலைப்பக்கம் அமர்ந்தார். பன்னீர் வரவழைத்துத் தெளித்தார். விசிறியால் இளங்காற்றை எழுப்பினர்.

சிவா....சிவா....சிவா....என்று முனகியபடியே தம்பதிகள் ஒருவர் பின் ஒருவராய்க் கண் திறந்தனர். அவ்விருவர் அடியிலும் சுகபதி வீழ்ந்து வணங்கினர்.

என்ன அற்புதத் திருவுருவம்! காலத்தில் உதவி, எளியேன் உயிர் காத்த தங்கட்கு என்ன கைம்மாறு செய்வேன்! குறித்த காலத்தில் அருமையாகத் திருவுருவைச் சமைத்த தங்கள் திறமையே திறமை!

சுகபதி அன்பரே! ஆகூழால் செயல் நிறைவேறினல், இது எம் திறமை என்பம். நிறைவேருவிடில், என் பாபம்

---

அன்னமதால் ஆகுமுடல் வளர்க்கைக் காக
அனுதினமும் நினைமறந்தேன் அவதி யோனே

என்பம். உண்மையை உரைப்பதானால், எம்பெருமான் அவரவர்தம் உள்ளிருந்து உதவு திறம். அவ்வளவு தான்.

நீலக் கடல் தடைப்பட்டு நிற்கிறதே! வடவைக் கனல், நீரை இடையறாது உறிஞ்சிக் கடலின் நடுவிடத்தில் வாழ்கிறதே! அளவிலாத அண்டங்கள் அந்தரத்தில் சுழன்று ஆதாரமின்றி அமைந்தனவே! இவைகளில் இறை திறமையை அறிகிறோம் அல்லவா!

ஆக்கி அளித்துத் துடைக்கும்—தொழில்
அத்தனை வைத்தும் எள்ளத் தனையேனும்
தாக்கற நிற்கும் சமர்த்தன்

நம் ஆண்டவன்.

உமது பிராண த்யாகத்தைத் தடுத்தேன். தாப ஜுரத்தால் தடைப்பட்டேன். யானே பிராணத்யாகம் செய்து கொள்ள முயன்றேன். பசியகற்றுவிடில் நான் பிராணத்யாகம் செய்து கொள்வேன் என்று குறிப்பிட்டு, மூன்று நாளாக நிவேதனம் செய்யாத என் குறையைப் பாயசம் ஏற்று நிவர்த்தித்து, இவ்வுருவைத் தன் சங்கற்பத்தால் செய்தளித்தான் எம்பிரான். என்ன அதிசயம் என்பேன்! என்று, என்னையும் உருக்கும் அன்புக் கண்ணீருடன் விளைவை விரிவாக விளக்கினார் சங்கர பத்தர்.

செட்டியாரும் பிறரும், இன்பக் கண்ணீர் இடையறாது ஒழுக, கரங்குவித்து இவ்வரலாற்றைக் கேட்டனர். எம் பெருமானே! உன் ஆடலே ஆடல் என்று விக்ரகத்தின்முன் வீழ்ந்து வணங்கினர். பத்தர் தம்பதிகளைப் பணிந்தனர்.

சிற்பியாரைத் துணைகொண்டு, மந்திர பூர்வமாகக் கும்பாபிஷேகம் நிறைவேறியது. சுகபதியும், பத்தர் தம்பதிகளும், என்றும் அவ்வாலயத்தில் வழிபட்டு இன்பங் கண்டனர். நலஞ் சிறந்த பாயச நிவேதனம், இன்றும் அக் கோயிலில் இனிது நடைபெறுகின்றது,

வாழ்க அடியவர்!

---

தன்னறிவைப் பெற்றிடவே ஞானமார்க்கச்
சாதனைகள் எத்தனையோ சாதித் தேனே

# விக்னேஸ்வரம் பிரம்ம ஸ்வரூபம்

(ஆ. கி. ரங்கராஜன்.)

விக்னேஸ்வரம் எனில் பக்தர்கள் கொண்ட லக்ஷியத்திற்கு எதிராக நிற்கும் தடைகளை நீக்கவும் துஷ்டர்கட்கு அத் தடைகளை ஏற்படுத்தவும் தலைவனுக விளங்கும் இறைவனின் வடிவம் என்பதாம்.

பிரம்மஸ்வரூபமாக விளங்கும் இறைவனைப் பெரியோர்கள் விநாயகனுய்க் கண்டுள்ளனர். விநாயகம், வி நாயகம் என்ற இரண்டாகப் பிரித்து இரு பதங்களுக்கும் அறிஞர்கள் பின் வருமாறு பொருள் கூறுகின்றனர்.

விநாயகன்—வின + அகன்; அன்பர்களின் தவறுகளை, அன்பர்களின் துன்பங்களை, வினைகளை அகற்றி அருளுபவன்.

விநாயகன்—'பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்த' மயமாய் விளங்குதலால், தானே பரப்பிரம்ம ஸ்வரூபமாய் விளங்குதலால், தனக்கு நிகராக எவரும் இல்லாத காரணத்தால், தானே சகலவற்றிற்கும் நாயகனுய் விளங்குதலால், தன்னைவிடப் பெரும் நாயகன், தலைவன் இல்லை என்பதால் அடைந்ததோர் நாமமாகும்.

ஏகதந்தன்—அதாவது ஒற்றைத் தந்தத்தோடு விளங்குபவன் என்று கூறுவர். ஏன்? இரண்டு தந்தங்கள் இருந்தாலென்ன? யானையின் துதிக்கை முகம் ஏன் அவனுக்கு உண்டாயிற்று?

இவற்றின் விவரங்களைப் பின்வரும் வரலாற்றால் அறியலாம்:

---

மின்னெளிசேர் வேலதனைக் கரத்தில் ஏற்றும்
வித்தகனே நினைமறந்தேன் விதியி லேனே

ஒரு காலத்தில் அரக்கன் ஒருவன் கடுந்தவம் புரிந்து, சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்று அமரர்களை வென்று, சிறைப்படுத்தி, ஸகல புவனங்கட்கும் தானே அரசனாகி, அறநெறியை மீறி ஆண்டான். (விலங்குகளில்) வலிமையும், திண்மையும் புதுமையும் வாய்ந்ததான யானைத் துதிக்கையுடன் விளங்கியதோடு தன் போன்று உருக் கொண்டவராலன்றித் தனக்கு இடையூறு நேரலாகாது என்ற வரமும் பெற்றவனாதலின் கஜமுகாசுரன் எனப் பெயர் பெற்றான்.

பிரதி தினமும் அனைவரும் தன்னை அணுகி ஆயிரம் தோப்புக் கரணங்கள் இட்டுச் செல்லவேண்டுமென்ற ஆணையிட்டான் அரக்கன். அல்லலை ஆற்றாத அமரர்கள் அரனைப் பிரார்த்தித்ததன் பயனாய் மந்த்ர மண்டபத்தினுள் பிரணவ வடிவத்தில், திரிமூர்த்திகளின் அம்சமாய், மத யானை வதனத்துடனும் நான்கு கரங்களுடனும் ஜோதி ஸ்வரூபமாக ஓர் சிசு தோன்றி வெளிப்பட்டது. உமையாளும் சங்கரனும் அச்சிசுவைத் தம் சிசு என அகிலத்தோர் புகழ வளர்த்து வந்தனர்.

கஜமுகாசுரனின் சதிகளுக்குத் தப்பிய கணநாதனாகிய அப்பெருமான் காலக்கிரமத்தில் கண்ணுதலோன் கட்டளை பெற்று கஜமுகனுடன் போர் தொடுத்தனன்.

வெஞ்சமரிலும் அரக்கன் வீழாதது கண்ட விநாயகன் அசுரன் சாகா வரம் பெற்றிருத்தலையும் ஆயுதங்களால் அழியான் என்பதையும் அறிந்து அவனை அடக்கத் தன் ஒரு தந்தத்தை முறித்து அசுரன் மீது வீச, அவன் அங்கம் பிளந்து உருக்குலைந்து மூஞ்சுறு வடிவத்துடன் கணநாதனைச் சரணடைந்தான். இறைவன் அவனுக்கு அபயமளித்துத் தனது வாகனமாக அவனை ஏற்றுக் கொண்டனன்...

---

நீங்காத கவலைவந்து தாக்கும் போது
நிச்சலமாய்க் கூவிநினை நினைத்திட் டேனே

தந்தத்தை விநாயகன் முறித்துக் கொண்டதற்கு வேறொரு காரணமும் பல்லோர் உரைக்கின்றனர் :

வியாசன் மகாபாரத காவியத்தைப் பாட, கணநாதன் அதை எழுதினன். எழுத்தாணி ஒடிந்தது. உடனே அவனுக்குத் தோன்றிய யுக்தியால் **தனது தந்தத்தை ஒடித்து எழுத்தாணியாக** அதை உபயோகித்துக் கொண்டனன். இதை வில்லிபுத்தூரார் தாம் பாரதத்தைத் தமிழாக்குவதற்கு முன்பாக விநாயகன் துதியில் விவரிக்கின்றார்.

"நீடாழி உலகத்து மறைநாலோடு ஐந்து என்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக **அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக** எழுதும் பிரானைப் பணிந்து அன்பு கூர்வாமரோ'
—வில்லி பாரதம்.

ஆக்கல், காத்தல், நீக்கல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் விநாயகனே நடத்துகின்றான் என அறிவின் மிக்கோர் கூறுகின்றனர்.

எங்கும் நிறைந்து விளங்கும் இறைவனே இவ் வுருவத்தில் அடியார்க்குக் காக்ஷி அளித்துக் கொண்டுள்ளானெனில் ஐந்தொழிலுக்கும் அதிபதி அவனை யன்றி வேறு யார் உளர் ?

(தொடரும்)

---

பாங்காக உனதுதிரு நாமந் தன்னைப்
பத்தியுடன் படிக்க அருள் பரம மூர்த்தீ

# உலகம் துன்பமயமா? அல்லது இன்பமயமா?

(எம். பி. தியாகராஜன், B.A.)

ஒரு சமயத்தில் உலகத்தை இன்பமயமாகவும், ஒரு சமயத்தில் துன்பமயமாகவும் ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டு வருகிறோம். உலகத்தை இன்பமயமாகக் காண்பதே ஞானமாகும். "பார்த்த இட மெல்லாம் பரமன் காண் அம்மானே" என்று மணிவாசகர் உலகத்தை சிவமயமாகக் கண்டு ஆனந்தித்தார் அல்லவா!

இந்தக் கேள்வியை டாக்டர் இராசாபகதூர் என்ற ஒரு பேரறிவினர் 1603ம் ஆண்டில் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் அவர்களைக் கண்டு கேட்டார். அது சமயம் சுவாமிகள் அவர்கள் மௌன நிலையிலிருந்தமையால் பின் வருமாறு மணலில் விடையெழுதினர். "இவ்வுலகம் ஐவகைப் பகுப்புடையது. அவற்றுள் ஒருபொருளைக் குறித்து, இது இருக்கின்றதெனப்படுவது சத்து; விளங்குகின்றது என்பது சித்து; பிரியமாக இருக்கிறது என்பது ஆனந்தம். இவற்றோடு உருவமும் பெயரும் சேர்ந்து உலகமாம். உருவமும் பெயரும் மாயையின் கூறுகள். சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றும் பரமான்மாவின் கூறுகளாம். ஆதலின் இவ்வுலகத்தை மாயையின் கூறுடன் சேர்த்துப் பார்க்கில் அசத்தாகவும் சடமாகவும் துன்பவடிவமாகவும் இருக்கும். அந்த மாயையின் கூறுகளை நீக்கி, பரமான்மாவின் கூறுகளை மாத்திரம் உண்மை நோக்கத்தாற் காண்பார்க்கு எல்லாம் சைதன்ய ரூபமேயாம்." இந்த விடையைக் கண்ணுற்ற அந்த டாக்டர் அவர்களுக்கு சுவாமிகளின் மீது பேரன்புண்டாகி, அவர்களது கடைசி காலம் வரை சுவாமிகளை ஆதரித்து வந்தார்.

---

ஆங்காரம் தானழிந்து அகமொன் ருகி
ஆனந்தத்து யானழுந்த அருள்செய் வாயோ.

இதே கருத்தை அடக்கி சிதம்பரசுவாமிகள் தாமியற்றியுள்ள திருப்போரூர் சந்நிதிமுறையில் "சிறுதேர்ப்பருவம்" என்ற தலைப்பின் கீழ்ப் பின்வரும் பாடலை பாடியுள்ளார்கள்.

"ஒருபொரு ளிடத்தினிற் சச்சிதா னந்தமுடன்
உருவ நாமமு முள்ள தென்
றுறைதந்து முன்னர்பின ருண்டாய் விளங்கியுறு
பிரியமா யுள மூன்றுளே
மருவிரிய வருமெய்ம்மை யுருவநா மம்பொய்ம்மை
வன்பழுதை யுரக மிருளின்
மாரு தறிந்திடுதி பின்பழுதை நன்ரு
மதித்தவர்க் கரவின்மையின்
இருளறும் பிரமமே நிகழும் மற்றெரு பொருளும்
எதிரிட் டிலங்காதென
என்பிறவி வாரிதியி லாழுமெனை வாவென்
றெடுத்தரு ளளித்த குரவா
தெருளுறுங் கலைமுனிவர் பரவுபோ ரூர்முருக
சிறுதே ருருட்டி யருளே
சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதயமணி
சிறுதே ருருட்டி யருளே."

(ஒரு பொருளினிடத்தில் சச்சிதானந்தமொடு உருவமும் நாமமும் உள்ள தென்று அருளிச் செய்து, அவற்றுள் சச்சிதானந்தம் மெய்ம்மை யெனவும், உருவமும் நாமமும் பொய்ம்மை யெனவும், ஒரு கயிறு இராக்காலத்துப் பாம்பு போல் தோற்றமளிக்க ஒரு விளக்கொளியால் தோற்றரவாகிய மயக்கம் ஒழிதல் போல, அஞ்ஞானத்தை போக்கும்படியான பிரமம் ஒன்றுமே நிகழாநிற்கும். வேறொரு பொருளும் அதன்முன்னிட்டு நிகழாதென்று ஏழ்பிறப்பாகிய கடலில் அழுந்திய என்னை வாவென்றெடுத்து அனு

---

தற்பரனே சிற்பரனே தமியேன் என்றும்
தமிழால் உன்தனைப் பாடும் தயைசெய் வாயோ.

பூதி அருளிய போரூர் முருகா) என்று சிதம்பர சுவாமிகள் பிரார்த்திக்கிறார்.

சாஸ்திரக் கருத்துக்களை இவ்வாறு தோத்திரப் பாடல்களாக மனனம் செய்வதால், மனம் தூய்மை யடையும். மனம் தூய்மை யடைதலாவது, நாம் காணும் பொருள்களின் குற்றங்களையே கண்டு சஞ்சலப்படாது, நல்லவற்றைக் கண்டு இன்பமடைதலாகும். இயேசுநாதரும் அவருடைய சிஷ்யர்களும் ஒரு வீதி வழியே சென்றுகொண்டிருந்தபோது ஓரிடத்தில் ஒருநாயின் பிரேதநாற்ற மடித்துக் கொண்டிருந்ததைக் கண்டார்களாம். சிஷ்யர்கள் அதைக் கண்டு அருவவறுப்புக் கொண்டனராம். ஏசுநாதரோ அந் நாயின் பற்களைக் கண்டு, அப்பற்கள் முத்துகள் கோர்த்து வைத்ததுபோல அழகாயிருக்கின்றன என்று அவ்வழகைப் பாராட்டினராம். இதையே திருவள்ளுவர்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறுகிறார்.

அப்படி உலகத்தை இன்பமயமாகக் காணக் கூடியவர்கள் ஞானிகள். நம் போன்றவர்கள் துன்பமய மாகத்தான் காண நேரிடுகிறது என்று மனப்பாங்கு கொள்வது கூடாது. இப்போது பிரதம மந்திரியாய்த் திகழும் நேரு அவர்கள், டேராடூன் சிறைச்சாலையில் வௌவால், கொசு, இன்னும் பலவித துஷ்டபூச்சிகள் நிறைந்த அறையில் வாசம் செய்த போழ்தும், வெளியில் மலைகளின் தோற்றத்தையும், செடிகளின் இளந்தளிர்களின் வனப்பையும் கண்டு, தினம் காலையில் உலாவச் செல்லும்போது ஆனந்தமடைவரென்று அவர் சரித்திரம் கூறுகிறது. சிறைச்சாலையிலும் அவர் உலகத்தை இன்பமயமாகக் கண்டாரெனின், அம்மனப்பாங்கே அவரை இந்த உன்னத நிலையில் கொண்டு விடுத்தது.

---

**என்குற்றம் பொருட்படுத்தா தென்னைக் காக்க**
**என் முன்னே வரவேண்டும் இமயர் கோவே.**

தற்போது மேனுட்டு "உள்ள நூல்" ஆராய்ச்சியாளர்களும், மனதை எப்போதும் உல்லாசமாக வைத்துக்கொள்வதால் உடல்நலமும் வாழ்க்கையில் வெற்றியும் உண்டாகும் என்று நிரூபிக்கிருர்கள். ஜப்பான் முதலிய நாடுகளில் "இந்த உலகம் ஆண்டவனுல் படைக்கப்பட்டது. எனவே சர்வகருணமூர்த்தியும் வாலறிவனுமாகிய இறைவன் உலகில் துன்பத்தையும் அல்லல்களேயும் உண்டாக்கி யிருக்க முடியாது. அப்படி நமக்குத் தோற்றுவது நம்முடைய மனப்பாங்கின் குறையேயாகும். இறைவனிடத்தும் அவனுடைய நல்ல குணங்களிடத்தும் உண்மையாக நம்பி, நம்முடைய மனம் தூயனவற்றைக் காணவேண்டுமென்று பிரார்த்திப்போமாஞல், நம்முன் ஒரு நோயுற்றவ னிருப்பினும் அவன் நோய் நீங்கி குணமடைகிருன் என்று" பல சான்றுகளுடன் பத்திரிகைகளில் எழுதுகிருர்கள்.

எனவே உலகத்தைத் துன்பமயமாகவோ இன்பமயமாகவோ பாவிப்பது நம்மனத்தைப் பொறுத்தது. உலகத்தைச் சச்சிதானந்த சொருபமாகவும் இன்பமயமாகவும் காண்பது ஒவ்வொருடைய க்ஷேமத்திற்கும், உலக க்ஷேமத்திற்கும் இன்றியமையாதது.

---

# அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,)

(253-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

**காஞ்சி :**

காஞ்சியில் நமது ஒலி முனிவர் அருளிய திருப்புகழ்ப் பாக்களில் தலவரலாருகக் கூறும் பகுதியை முதலில் பேசுவோம்.

---

முருகா முதல்வா முகுந்தன் மருகா
கருணுகர கண் கடைபார் கனியே

**தேவியார் ஆடல்:**

சீரார் சிவபுரத்தில் ஏரார் சிம்மாதனத்தில் உலகெலாம் ஈன்ற அன்னையாகிய அம்பிகையோடும் அண்ணலாராகிய அரனுர் இனிது வீற்றிருந்தார். இப்புவிவாழும் சிறப்பால் இறைவி எழுந்து பெருமானை வணங்கி 'சுவாமி! உமக்கு உருவும் உண்டு அருவும் உண்டு என்கின்றனரே! எது உண்மை?" என்றனர். பரமன் "இரண்டும் உண்மையே" என்றனர்.

**தேவி:** "உருவம் எப்படி வரும்?"

**சிவனுர்:** "உயிர்கள் உய்ய வேண்டும் என்னும் கருணையால் – அருட் சத்தியாகிய உனது அமிசமாகவே உருவங் கொள்வோம்."

**தேவி:** "அப்படியானுல் நான் இல்லையானுல் உமக்கு உருவமே இல்லை. ஆதலின் எல்லாம் எனது மயம் அன்ருே?"

பெருமான் மகிழ்ந்து "தேவீ! உண்மைதான். உருவமெல்லாம் உனது அமிசம். ஆயினும் அதில் உயிராவது நாம் என்றறிக. உலகம் உன் மயமானுல் அதற்கு உயிரும் ஒளியும் எம்மிடமிருந்துதான் வரும். உலகிற்கும் சர்வ உயிர்த்திரள்களுக்கும் பகலும் இரவும் ஒளி தருவன எமது வலக்கண்ணும் இடக்கண்ணும் ஆகும். அவசியமான காலத்தில் தான் நமது அழல்கண் என்னும் நெற்றி விழி திறக்கும். இதனுலேயே நமக்கு முக்கண் மூர்த்தி என்ற நாமமும் உண்டு." என்ருர்.

இதனுண்மையை அறிய எண்ணி தேவி விளையாட்டாகப் பின்புறமாய் ஓடி விரைவில் செம்மல் பிறைவேணியனுர் திருக்கண்களை மூடிவிட்டாள். இரு கண்களும் மூடவே இருசுடர்கள் (சூரிய சந்திரர்) மறைந்தன. உலகம் முழுதும் இருண்டது; எட்டுத் திசைகளிலும், இருளே அறியாத இமையவர் இருக்கையாகிய பொன்னுலகிலும் காரிருள் கவிந்தது. அதனுல் படைப்பு நின்றது. சிறப்

---

குருவே குமரா குழகா சிவனுர்
அருமை மகனே அருள்வாய் குகனே

பொடுபூசனை முதலிய அறங்கள் அனைத்தும் அறவே ஒழிந்தன. இறைவற்கொரு கணப்பொழுது என்றது உலகிற்கு எண்ணில் பல்லூழிக் காலமாக உயிர்கள் இருளில் கிடந்து வருந்தலாயின. தேவியார் உடனே கைகளை எடுத்தனர். சிவனார் விழிகள் திறந்தன. எங்கும் இறைவன் அருளால் இருள் ஒதுங்கி ஒளி பரவியது. உடனே கண்ணுதல் கடவுள் "உமையே! உன் விளையாட்டால் நேர்ந்த விபரீதம் தெரிந்ததா? ஒரு கணம் உன் கைகள் நம் கண்ணை மூடியதால் உலகங்கள் தலை தடுமாறவும் தருமங்கள் நிலை குலையவும் நேர்ந்தமை அறிந்தாயன்றோ? இத்தனை உயிர்கட்கும் இன்னல் நேரச் செய்த பாவத்திற்குக் கழுவாயாக நாம் விரும்பி எழுந்தருளியுள்ள தலங்களில் சிறந்த காஞ்சியில் சென்று நம்மை வழிபடுவாயாக." என்று காஞ்சியின் சிறப்பெல்லாம் கூறி விடுத்தனர். பார்வதியும் பரமனைப் பரவிப் பணிந்து விடை கொண்டு மண்ணுலகு வந்தாள். காசியில் விசுவநாதரை வணங்கி வேறோர் இலிங்கம் நிறுவி, வழிபட்டு ஐப்பசி அமரபக்கம் ஏகாதசி திதி பூரநன்னாளில் அழகிய காஞ்சியம் பதியை அடைந்தனள்:

**தேவியார் பூசை :**

காஞ்சியில் காப்புத் தீர்த்தத்தில் நீராடி சங்கற்பஞ் செய்து பொன் காப்பு நாண் (கங்கணம்) அணிந்து ஓர் இலிங்கம் அமைத்துப் பூசித்தாள். அதுவே 'கங்கணேசர்-காப்புலிங்கம்' எனப்படும்:

**தேவியார் அறம் வளர்த்தல் :—**

தேவி பிறகு பஞ்சதீர்த்தம் என்னும் உலகாணி தீர்த்தத்திற்கு வந்தாள். அங்கு ஐம்பூத தேவர்கள் முழுகி உலகுக் கெல்லாம் ஆணி (ஆதாரம்) ஆகும் வரம் பெற்றனர். அத் தீர்த்தக் கரையில் பிலாகாசத்தை அடைந்தாள். தமது விளையாட்டால் அறங்கள் நிலைகுலைந்து விட்டன. அவற்றை முன்போல் நிலைபெறச் செய்ய எண்ணி அன்னை அங்குச் சில நாட்கள் தங்கினள். அறச் சாலை ஒன்று அமைத்து வீற்றிருந்தாள். முப்பத்திரண்டு தருமங்களை

---

உருகும் அடியார் உளத்தில் உறையும்
உருவே நின்னை உணர அருளே

யும் தாமே இயற்றி உலகிற்கு உணர்த்தினள். அதனால் அம்மைக்கு 'அறம் வளர்த்த செல்வி' என்ற திருநாமமும் உண்டாயிற்று. பிறகு பராபரை, கம்பா நதிக்கரையில் வேதமாகிய மாவடி மன்னிய ஏகாம்பர நாதரை அடைந்து அருள் பெறுமாறு விரைந்தனள்.

ஏலவார் குழலியாகிய அம்மை, முப்பத்திரண்டு அறம் வளர்த்த சிறப்பை நமது அருணகிரியார் (460, 464.)

" அமலை தென்கச்சிப் பிச்சி மலர்க்கொந் தளபாரை
அறவி நுண்பச்சைப் பொற்கொடி கற்கண்டு
அமுதினும் தித்திக்கப்படு சொல்கொம்பு
அகில அண்டத் துற்பத்தி செய்முத்தின்

—பொலமேருத்

தனிவடம் பொற்புப் பெற்ற முலைக்குன்று
இணைசுமந் தெய்க்கப்பட்ட நுசுப்பின்
தருணிசங் குற்றுத் தத்து திரைக்கம்

—பையினூடே

தவமுயன்றப் பொற்றப்படி கைக்கொண்டு
அறம் இரண்டு எட்டெட் டெட்டும் வளர்க்கும்
தலைவி " (கச்சித்திருப்புகழ்)

அறம் $2 \times 8 + 8 + 8 = 32.$

" அபிராமி, எக்குலம் குடிலோடு உலகியாவையும்
இல்பதிந் திருநாழி நெல்கொண் டறம்
எப்போதும் பகிர்வான் குமரா எனவுருகேனோ"

(பொது)

என்று பாடுகின்றார்.

" புண்ணியத் திருக்காம கோட்டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்"

—சேக்கிழார்.

" ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறஞ்செய்யும் உன்னை" (அபிராமபட்டர்)

" இச்சைப்படி தன் பேர் அறம் எண்ணான்கும் வளர்க்கும்
பச்சைக்கொடி" (வில்லிபுத்தூராழ்வார்)

---

திருவே கருணைத் திரையே துரையே
வருவாய் அருள்வாய் வடிவேல் அரசே

**காமாட்சியார் தவம் :**

மகாதேவி கீழ்த்திசை முதலாக உள்ள சிவதலங்களைப் பணிந்து ஏகம்பம் புகுந்து நான்காம் ஆவரணத்தில் திருமுன்றிலுள்ள சிவகங்கையில் நீராடினார். நீறு பூசி நியமமுடித்து மாவடியுற்று மகாமண்டபத்தில் சிறிது போது இருந்தாள். அப்போது தோழியர்களை நோக்கி பூசைக்கு ஆவன அமைக்குமாறு பணித்தாள். உமாபத்திரை என்பாள் அமைத்த கிணற்றில் நீராடி இரண்டு பட்டாடைகளணிந்து இரண்டாம் ஆவரணத்தில் கணபதியையும் கந்தவேளையும் பூசித்து மாவடிப்பிரானை அடைந்து கண்ணுரத் தரிசித்துக் களிகூர்ந்தாள் பின் அப்பெருமானுக்கு முறைப்படி அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தி பிலாகாசம் சார்ந்து நாலெட்டறங்களையும் நலமுறச் செய்திருந்தனள்.

**தழுவக்குழைந்தது :** இங்ஙனம் நமது அன்னையார் வழிபடும் நாளில் ஓர்நாள், அம்மையின் பத்தியுறுதியை அகில லோகத்தவரும் அறிந்துய்யுமாறு ஏகம்பர் திருவுளம் பற்றினார். அதனால் உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களும் திரண்டு கம்பையாற்றில் கலந்தன. ஊழியிறுதிக் காலத்து வெள்ளப் பெருக்கு போல நீர் பெருகியது. வானோரும் அம்மையின் அருமைத் தோழியர்களும் அஞ்சி நடுங்கினர். இறைவி யாரும் அஞ்சுதற்கு முன்னரே வெள்ளம் பெருகி விரைந்தது. தேவியார் திடுக்கிட்டுப் பெருகும் வெள்ளம் பெருமான் மீது செல்லாமற் றடுக்க எண்ணினர். அவரது நெற்றியில் வேர்வை துளித்தது. மேகலையும் கைவளையும் காற்சிலம்பும் பேரொலி காட்டின; ஓட்டமாய் ஓடி பீடத்தில் ஏறி வலமுழந்தாளை ஊன்றியபடியே ஆண்டவனை மார்பிறுகத் தழுவிக்கொண்டாள். இறைவராகிய கம்பரும் அங்கங் குழைவுற்று அம்மையின் குயத்தழும்பும் வளைத் தழும்பும் ஏற்று மகிழ்ந்தனர். உடனே அவ்விருவகைத் தழும்புகளுடன் கூடிய உருவுடன் சிவலிங்கத்தி னின்றும் தோன்றி அம்மையாரை ஆரத்தழுவி "அஞ்சேல்" என்றருளி, வந்த வெள்ளப் பெருக்கைச் 'சர்வார்த்தமாக' நிறுத்

---

குகஷண் முகனே குணவா ரிதியே
கொடியேன் தனையாள் சரணம் சரணம்

தினர். தேவியின் காள நிறம் (கரிய நிறம்) போக்கி கவுர நிறம் தந்து 'கவுரி' யாக்கி பங்குனி உத்திரத்தில் மணந்து இடப்பாகம் ஈந்தனர். ஆண்டுதோறும் முப்பத்திரு அறம் வளர்த்தற்கு வித்தாக இருநாழி நெல்லும் உதவுவதாக வரம் தந்தார். இவற்றை அருணகிரி அண்ணலார் பாராட்டு வதைக் காணுங்கள்:—

" இறைவர் மாற்றற்ற செம்பொன் வடிவம் வேற்றுப்பிரிந்து
இடப மேற்கச் சிவந்த உமையாள் தன்
இருளை நீக்கத் தவஞ் செய்தருள நோக்கிக் குழைந்த
இறைவர் " (குமரகோட்டத் திருப்புகழ்)

(இறைவரது பொன்னுர் மேனி வேறும்படிப் பிரிந்து விடை மீது காஞ்சி வந்த உமையின் காளநிறம் நீங்கித் (கவுர நிறம் பெறத்) தவஞ் செய்தருளக் கண்டு குழைந்த வெள்ளக் கம்பர்.)

" மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத்தழும்புடன் முலைச்சுவடு அணிந்தார்"
(சேக்கிழார்)

" நதிகொள கத்திற்பயந்து கர்பர் மெய்
கருக இடத்தில் கலந்திருந்தவள் " (திருப்புகழ்)

" பொருவின் மலை யரையனருள் பச்சைச் சித்ரமயில்
புரமெரிய இரணியத நுக்கைப்பற்றிஇயல்
புதிய முடு கரியதவ முற்றுக் கச்சியினி லுறமேவும் புகழ்வநிதை "
(திருப்புகழ்)

" உமை நங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சிவெருவி ஒடித்தழுவ வெளிப்பட்டக்
கள்ளக் கமபனை " (சுந்தரர்)

(தொடரும்)

---

ஜகரட் சகனே தருவாய் தவமே
சகநா யகனே சரணம் சரணம்

# மதிப்புரை

## (1) ஸ்ரீ சிவானந்த திக்விஜயம்

ஹிமாலயம் முதல் இலங்கைவரை ஸ்ரீ சிவானந்தர் யாத்திரை செய்து கண்ணிற்கும் கருத்திற்கும் மக்கட்கு விருந்தளித்த அபாரமான செய்திகளைத் தன்னகத்தே தாங்கிய 396 பக்கம் கொண்ட நூல் இது. நூல் முழுதும் எங்கும் மக்கள் திரண்ட செய்தி: அவர்கட்கு ஸ்வாமிகள் செய்த உபதேசங்கள் முதலியன, இமயம்போல், நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றன. பார்க்கத்தக்க நூல், படிக்கத்தக்க நூல். சிந்தனையைக் கிளரும் சிறந்த நூல்.

விலை 6 0 0

## (2) டாக்டர் தர்மபூஷணம் அல்லது ஸ்ரீலஸ்ரீ சிவானந்தர்

ஸ்வாமிகள் தலைமைச் சீடர் ஸ்ரீசுவாமி சிரத்தானந்தா அவர்கள், பெருமுயற்சி செய்து தொகுத்த ஸ்ரீசிவானந்தர் வரலாறு கூறும் நூல் இது. இரக்கம் மிக்க குப்புசாமியாயிருந்து, உடல்நோய் தீர்க்க மலேயா டாக்டராகி உதவி பல செய்து, தர்மபூஷண நாமம் தழைத்து, ரிஷிகேசத்தில் உலகிற்கு உயிர்ப்பிணிக்கு மருந்துதவும் சிவானந்தராகிய சிறந்த செய்திகள் பலவற்றை விரித்து விளக்கும் 165 பக்கம் கொண்ட இந்நூல், ஓதி எவரும் உணர்தற்குரியது.

விலை 2 0 0

## (3) Peoples Preceptor

அகில மக்களின் ஆசார்யர் எனும் பொருள் கொண்ட இந்நூல், சிரத்தா ரத்ன ஸ்ரீ L. A. டாக்கர் அவர்கள் எழுதியது. ஸ்ரீ சிவானந்தா அவர்கள், மக்கள் உய்யக் காட்டும் மார்க்கங்கள் இவை இவையென ஆங்கிலத்தில் குறிப்பிடும் அரிய நூல் இது.

விலை 0 12 0

## (4) Srimad Bhagavad Gita

பகவத் கீதையின் மகிமையைப் பாரத நாடு அறிந்துளது. அதை எந்நாட்டவரும் இனிதுணர ஆங்கிலத்தில் வந்த நூல் இது. இந்த நான்கு நூல்களும் ஸ்ரீசிவானந்தர் ஆஸ்ரம வெளியீடுகள் என்கிறபோதே இவைகளின் அருமையை எவரும் அறிவர்.

விலை 1 8 0

கிடைக்குமிடம் :

ஆனந்தகுடீர்

சிவானந்த நகர் போஸ்ட், ரிஷிகேசம், ஹிமாலயம்.

There is a sloka in *Vrutha Chudamani* quoting from *Sri Markandeya Puranam* which runs as follows:

> கலௌகுமார ரூபேண ஷண்முகோ பகவான்ஹரி:
> த்ருஸ்ய ஏகமுகேநைவ வேங்கடாசல நாயக.

The religion of the *Upanishads* knows only ond God and there is no second. His grace, as it approaches and sustains the Jivas in the world, takes multitudinous forms according as time, place and circumstances suit. The form of a lad—Kumara, has been the most enchanting form for the world of jivas for centuries. The lad form of God is seen in the avatar of Sri Krishna and Sri Kumara or Muruga. The above sloka instructs that Krishna and Skanda are one. Not that other forms are not all but one—one alone, but that these two forms are dynamic of spiritual blessing to a remarkable degree. In the Kaliyuga, the Lord instructs, inspires, and is known and seen and enjoyed in the shape of Sri Balaji of Tirupathi whenever he appears with a single face and in the shape of Shanmugha—the Lord of Six faces, otherwise known as Muruga. The Alwars sang of Sri Srinivasa that, at Tirupati, the archavathara discloses the synthesis of Siva and Vishnu, which is but an alternate way of describing the synthesis of Siva and Shakti. The Alwar has Darshan of the Lord 'ஈருருவும் ஒன்ருய் இசைந்து.'

Sri Arunagiri was blessed with darshan of Kumara—Muruga and again of Venkatesa or Srinivasa at Tirupati as will appear from the two

extracts hereunder quoted from Tiruppugazh. The first is this:

"வேந்த குமார குஹ சேந்த மயூரவட
வேங்கட மாமலையில் உறைவோனே"

The second is this:

"உபசாந்த சித்த குருகுல
பவ பாண்டவர்க்கு வரதன்மை
யுருவோன் ப்ரசித்த நெடியவன் ரிஷிகேசன்
உலகீன்ற பச்சையுமை யணன்
வரவேங் கடத்திலுறை பவ
னுயர் சார்ங்க சக்ரகரதலன் மருகோனே

The Lord in His infinite mercy has chalked out the path of Gnana for a devotee who clearing off the world as maya, seeks within oneself the Lord in the solitude of the soul. With equal mercy to the jivas, who are not capable of walking the path of Gnana which is as narrow as the edge of a razor, the Lord has opened out the broad royal road of Bhakti or of Love and devotion. The Lord is everywhere and whenever intensely desired and prayed for He takes an avataram and appears in the temples and elsewhere as the devotee desires, in forms and shapes wished for and blesses. The month of *Puratasi* is sacred to Lord Sri Krishna and equally so to Lord Skanda. The month of God-lad will soon move to give way to the month of the God-mother. Even in time and its passage bhakti affords the variety entertainment and enjoyment of the Lord and His mercy.

—*Thiruppugal Mani*

பணமேதரும் பதமென்றெணிப் பதடிகளைப் பலபாடினேன்!
மணமேதரும் நின்பொன்னடி மறவேன்இனி மறவேன்; இவன்
குணமேதுமில் லாதான்எனும் குணம்கொண்டுகாத் தருளாவிடின்,
கணமேனும்உன் றனைநான்விடேன், கணநாயகா! கணநாயகா!!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1955 ஐப்பசி - அமிர்தவசனி)


# Coffee

**Ours for Quality**

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

## சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924 Phone :—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அச்சில்) | | | |
| கணபதி பக்தர்கள் ,, | | | |
| முருகனடியார் ,, | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54,** பந்தர் தெரு, சென்னை-1


Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras-1